**தலைப்பு 126 – கல்வி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் மூன்றாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன கல்வி அமைச்சால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வில் நோக்கெல்லை

---

தலைப்பு 126 – கல்வி அமைச்சின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 12 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்,

காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக கல்வி அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.15 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றுகையில் வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப் பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளார் என்பது அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை. | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | |
| 127(1) (அ) | சரியான மற்றும் நிதி முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். (திணைக்களத்தின் நடவடிக்கைகளை நிதி மற்றும் திணைக்களத்தின் கட்டளைகளுக்கு இணங்கிய வகையில் மட்டுமல்லாது அரசாங்க கடமைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட நேர்மையுடன் நடைபெறல் வேண்டும்) | 1. செயல் நடவடிக்கைத் திட்டம் போதியளவில் சரியாகத் தயாரிக்கப்படாமை. | 2.1.1 |
| | | 2. பெறுகைகள் நடவடிக்கைகள் போதியளவில் சரியாக திட்டமிடப்படாமை | 2.2.1 |
| | | 3. பாதீட்டு மதிப்பீடுகள் நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்கப்படாமை. | 2.8(ஆ) |
| | | 4. பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை. | 2.11 |
| | | 5. உள்ளகக் கணக்காய்வு | 2.13 |

| | | | | |
|---|---|---|---|---|
| 127(1) (ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்படல் வேண்டும். | 1. | முகாமைத்துவ குறைபாடுகள் | 2.6 |
| | | 2. | இணக்கமின்மைகள் | 2.12 |
| | | 3. | மனித வள முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.14 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையிலும் அமைச்சின் பரிசீலனைக்கு உட்படுத்தல். | | பெறுகை நடைமுறைகளை அமுல்ப்படுத்துவதில் தாமதம் | 2.2.2 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | 1. | வாகனப் பயன்பாட்டின் குறைபாடுகள் | 2.3(இ) |
| | | 2. | ஒப்படைக்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல் | 2.3(உ) |
| | | 3. | பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுவதில் பலவீனங்கள் | 2.7 |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சினால் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல். | 1. | வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை | 2.1.2 |
| | | 2. | வருடாந்த பாதீட்டு எல்லையை விஞ்சி கடப்பாடுகளுக்கு உட்படல் | 2.4 |
| | | 3. | பொது வைப்புக் கணக்குகளில் குறைபாடுகள் | 2.10 |

| | | | |
|---|---|---|---|
| 127(5) | திணைக்களத்தின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் நுட்பமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும். | 1. ஒதுக்கீடு செய்த ஏற்பாடுகளைப் பயன்படுத்தாமை | 2.8(அ) |
| | | 2. குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் மூலம் பெற்றுக் கொண்ட நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துவதில் குறைபாடுகள் | 2.8(இ) |
| 127(6) | கணக்கீட்டு உத்தியோகத்தர்களின் பொறுப்பிற்கு வெளியே காணப்பட்ட வருமானம் அல்லது அரசிற்கு கிடைக்க வேண்டிய ஏனைய கட்டணங்கள் சேகரிக்கும் செயற்பாடுகளை கூடுதல் கவனத்துடன் செயற்பாட்டு அமைச்சின் பரிசோதனைக்கு உட்படுத்துதல் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் | 2.9 |
| 127(7) | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந் நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் /ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதனை கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடன் | நட்டங்கள் மற்றும் சேதங்கள் | 2.9 |

ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைப் பொறுப்பாகும்.

## 2. பொருன்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்டமிடல்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அமைச்சினால் நிறைவேற்றப்பட வேண்டிய 22 பிரதான செயற்பாடுகள் காணப்பட்டதுடன் அதற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம் சம்பந்தமாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வு செய்தல், ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை செய்தல் என்பவற்றின் மூலம் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயலாற்றல் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகள் அடைந்து கொள்ளப்பட்டுள்ளதா என்பதனை போதியளவில் உறுதிப்படுத்திக் கொள்வதற்கான சான்றுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

(ஆ) சில செயற்திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்படுதலும் தாமதித்தலும் கிளைகளுக்கிடையே நாளதுவரையாக்ககப்பட்ட தரவு முறைமை பேணப்படாமை கணனி தொழில்நுட்பத்துடனான தகவல் முறைமை இல்லாமை ஆகிய விடயங்கள் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முடியாமைக்கும் மேற்பார்வை செய்வதற்கு மற்றும் ஒழுங்குபடுத்துவதற்கு முடியாமைக்கும் காரணமாகவிருந்தது.

#### 2.1.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் அந்த அறிக்கை 2018 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.1.3 போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளை ஒழுங்கு முறைப்படுத்துதல்.**

1961 இன் 08 ஆம் இலக்க இரண்டாந்தர பாடசாலைகள் பயிற்சிப் கல்லூரி (மேலதிக ஒழுங்கு விதிகள்) அதிகாரச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் பிரகாரம் 05 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட வயதெல்லைக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குவதற்காக எந்த நபரினாலும் தனியார் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாது எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் கல்வி அமைச்சின் மேற்பார்வைக்கு உட்படாத அதிக எண்ணிக்கையான சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகள் நாடு முழுவதும் காணப்பட்டன. எவ்வாறாயினும் தேசிய கல்விக் கொள்கைக்கு இணங்க சர்வதேச பாடசாலைகளை மேற்பார்வை செய்தல் அமைச்சின் பிரதான குறிக்கோள்களின் ஒன்றாகும். இது சம்பந்தமான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இப்பாடசாலைகள் கம்பனிச் சட்டத்தின் கீழ் அல்லது முதலீட்டுச் சபையின் கீழ் தனியார் நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டிருந்தும் இலங்கையில் அடிப்படை கல்வியை வழங்குகின்ற பாடசாலைகளாக கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை அப்பாடசாலைகள் சம்பந்தமான தகவல்களை அமைச்சினால் சேகரித்துக்கொள்வதற்காக முறையான நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இலாபத்தை நோக்கமாகக் கொண்ட தொழில் முயற்சிகளை பதிவுசெய்யும் நடைமுறையின் கீழ் இப்பாடசாலைகளும் உள்ளடக்கப்பட்டிருப்பதனால் அப்பாடசாலைகளில் கல்வியைப் பெறுகின்ற மாணவர்களின் அடிப்படை உரிமைகள் எந்த அளவுக்கு நிவர்த்தி செய்யப்படுகின்றன என்பது தொடர்பாக முறையான பின்தொடர் நடவடிக்கை எதுவும் அரசாங்க நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது

(iii) அரசாங்க பாடசாலைகளில் இருக்க வேண்டிய ஆகக் குறைந்த தரம் மற்றும் முக்கியமான மாதிரிகளுடனேனும் இத்தனியார் பாடசாலைகள் சிறப்பான மட்டத்தில் காணப்படுகின்றதா, ஒவ்வொரு மட்டத்திற்கு இணங்க மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதற்காக தகைமை மற்றும் அனுபவமிக்க ஆசிரியர் குழாமை உள்ளடக்கியுள்ளதா, கல்வி முறைமையில் காலத்துக்கு காலம் இடம்பெறுகின்ற மாற்றங்கள் தொடர்பாக நாளதுவரையாக்கப்படுகின்றதா ஆகிய விடயங்களை மேற்பார்வை செய்யும் நடைமுறை அமைச்சில் காணப்படவில்லை.

(iv) அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஒழுங்கு விதிகளை மீறுதல் 1961 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை 57 ஆண்டுகள் காலமாக இடம்பெற்று வந்த போதிலும் நிகழ்காலத்திற்குப் பொருத்தமான வகையில் அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளைத் திருத்துவதற்கு கணக்காய்வுத் திகதி வரை முடியாதிருந்தது.

(v) 1960 இன் 05 ஆம் இலக்க இரண்டாந்தர பாடசாலைகள் பயிற்சிக் கல்லூரி விசேட ஏற்பாட்டு அதிகாரச் சட்டம் மற்றும் 1961 இன் 8 ஆம் இலக்க இரண்டாந்தர பாடசாலைகள் பயிற்சிக் கல்லூரி விசேட ஏற்பாட்டு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அரசாங்கம் பொறுப்பேற்பகாத சர்வதேச பாடசாலைகள் அரசாங்கத்தின் கல்விக் கொள்கைகளுக்கு இணங்க தனியார் முகாமைத்துவத்தின் கீழ் செயற்பட்டு வந்தன. அரசாங்கத்தின் உதவியைப் பெறுகின்ற 36 பாடசாலைகளும் அரசாங்கத்தின் அங்கீகரித்த உதவியைப் பெற்றுக்கொள்ளாத 44 பாடசாலைகளும் காணப்பட்டன அதற்கு மேலதிகமாக பிரதேச செயலாளர் மற்றும் பத்திரிகை விளம்பரங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் மூலம் நாட்டில் அவ்வாறான 286 பாடசாலைகள் காணப்படுகின்றதாகவும் அவற்றில் 11,105 ஆசிரியர்கள் சேவையாற்றுவதாகவும் 117,519 மாணவர்கள் கல்வி கற்பதாகவும் அவதானிக்கப்பட்டன. அவற்றில் 82 பாடசாலைகளில் நூற்றுக்கு குறைந்த எண்ணிக்கையானவர்கள் உள்ளமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) சிசு அருண கல்விசார் நிதியம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2003 ஏப்ரல் 29 ஆந் திகதிய பணிப்பாளர் சபைக் கூட்ட அறிக்கையின் பிரகாரம் 2001 இல் ஆரம்பிக்கபட்டிருந்த சிசு அருண கல்விசார் நிதியத்தின் பெறுமதி ரூபா 2.5 மில்லியன் பூரணமாகுகையில் புலமைப் பரிசில்களை வழங்குவதற்குத்

தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் அது தொடர்பான நிலையான வைப்பு ரூபா 2.6 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதியளவில் அது ரூபா 3.9 மில்லியனை மிகைத்திருந்த போதிலும் நிதியத்தின் குறிக்கோள்களின் பிரகாரம் புலமைப்பரிசில்களை வழங்கும் நடவடிக்கை இடம்பெற்றிருக்கவில்லை.

(ii) சிசு அருண கிரண்டி லிமிடட் என்ற பெயருள்ள கம்பனிப் பெயர் பதிவழிக்கப்பட்டிருந்ததனால் அதன் ஆதனங்கள் மற்றும் உரிமைகள் பொதுத் திறைசேரிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அமைச்சினால் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பான பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக அக்கம்பனிப் பெயரை பதிவழித்தல் தொடர்பான பொறுப்பு அதற்குரிய உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(இ) தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஆசிரியர் தகவல்களை உள்ளடக்கிய ஒரு தரவு அடிப்படையைத் (Data Base) தயாரித்தல் மற்றும் அதனுடன் இணைந்த ஆசிரியர்களுக்கும் அலுவலக முறைமைக்கும் தேவையான சேவைகளை வழங்குதல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் ஆதரவுடன் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை (EMIS) தோற்றுவிக்கப்பட்டிருந்தது. அதற்காக 2011 மார்ச் மாதத்திலிருந்து 2014 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியின் போது அறிவுள்ள சமூகத்திற்கான கல்விச் செயற்திட்டம் (EKSP) நிதியிலிருந்து ரூபா 64,060,373 செலவு செய்யப்பட்டிருந்தது.

(ii) இதன் முதலாவது கட்டத்தின் கீழ் 2012 பெப்ரவரி 27 ஆந் திகதி ஆசிரியர்களுக்காக தரவு முறைமையை நிறுவுவதற்காக ரூபா 900,000 (வரியின்றி) பணமும் 2013 யூன் 27 ஆந் திகதி இரண்டாவது கட்டத்தின் கீழ் முதலாவது கட்டத்தில் குறிப்பிட்ட தரவினை அடிப்படையாகக் கொண்டு ஒன்பது மொடியூல்களைத் தோற்றுவித்து வழங்குவதற்கு ரூபா 13,877,100 (வரியின்றி) பணமும் மொறட்டுவைப் பல்கலைகழகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதி வரை இம்முறைமையை உரிய வகையில் அமுல்ப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(iii) ஆசிரியர்களின் மனித வள முகாமைத்துவத்திற்குரிய தரவுகளைச் சேகரித்தலானது அவர்களின் தனிப்பட்ட கோவைகளைப் பேணுகின்ற வலய அலுவலகங்களின் மூலம் இடம்பெறுதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதற்காக மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தால் பேணப்பட்டு வந்த சேர்வர் இயந்திரத்திற்கு (server machine) பதிலாக புதிய சேவர் இயந்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் பேணப்பட்டு வந்த சேவர் இயந்திரத்தின் தரவுகளை புதிய சேவர் இயந்திரத்திற்கு மாற்றும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும் தரவுகளை உட்படுத்துவதில் உள்ள தாமதம் போதிய கணணிகள் மற்றும் இணைய தள வசதிகள் இல்லாமை ஆகிய காரணத்தால் புதிய நடவடிக்கையையும் எதிர்பார்க்கப்பட்டவாறு நிறைவேற்றுவதில் சிக்கல் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

**(ஈ) மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடத்தின் கணணிகள் மற்றும் துணைக் கருவிகளின் உத்தரவாத்திற்கு பிந்திய காலத்திற்காக உடன்படிக்கை செய்துகொள்ளல்.**

---

1000 பாடசாலைகள் செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 808 தொழில்நுட்ப ஆய்வுகூடங்களுக்காக தனியார் நிறுவனங்களிடமிருந்து 05 சந்தர்ப்பங்களில் போது கொள்வனவு செய்யப்பட்ட 51,712 கணனிகளும் துணைக்கருவிகளும் சம்பந்தமாக அந்த நிறுவனங்களால் வழங்கப்பட்ட 3 வருட உத்தரவாத காலம் முடிவடைந்ததன் பின்னர் உத்தரவாதத்திற்கு பிந்திய காலத்தை உருவாக்கி கொள்வதற்காக இணங்கியிருந்தனர். 2017 நவம்பர் 29 ஆந் திகதி வரை 500 தொழில்நுட்ப ஆய்வு கூடங்களுக்காக வழங்கப்பட்டிருந்த 32,000 கணனிகள் மற்றும் துணைக் கருவிகள் சம்பந்தமாக அந்நிறுவனங்களால் வழங்கப்பட்ட உத்தரவாத காலம் முடிவடைந்திருந்ததுடன் மேலும் 308 ஆய்வுகூடங்களில் காணப்பட்ட 19,712 கணனிகளின் உத்தரவாத காலம் 2018 யூலை 15 ஆந் திகதியளவில் பூர்த்தியடைவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. பயன்பாட்டுக் காலம் 3 ஆண்டுகளை மிகைத்துள்ள அக்கணனிகள் மற்றும் துணைக் கருவிகள் உருவாகியுள்ள சிக்கல் நிலைமையின் காரணமாக செயற்படுத்த முடியாமையால் அவற்றை பராமரிக்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் உத்தரவாதகாலம் முடிவடைந்த 500 தொழில்நுட்ப ஆய்வுகூடங்களின் 32,000 கணனிகள் மற்றும் துணைக்கருவிக்கான பின்னைய உத்தரவாத காலத்திற்கு இணங்கியமைக்காகக ரூபா 350 மில்லியனும் ஏனைய 308 ஆய்வுகூடங்களின் 19,712 கணனிகள் மற்றும் துணைக்கருவிகளுக்காக ரூபா 215.6 மில்லியனுமாக ரூபா 565.6 மில்லியன் செலுத்த வேண்டியிருநத்ததுடன் அதற்காக நிதி ஏற்பாடு வழங்க முடியாதிருந்ததன் காரணமாக பின்னைய உத்தரவாதத்தை உருவாக்கி கொள்வதற்கு இன்றுவரை முடியாதிருந்தது.

**(உ)சுரக்ஸா மாணவக் காப்புறுதித் திட்டம்.**

---

5 வயதிலிருந்து 19 வயது வரையான வயதுத் தொகுதியை அடைந்த 4.5 மில்லியன் பாடசாலை மாணவர்களுக்கு ஒவ்வொரு மாணவனுக்கும் ரூபா இரண்டு இலட்சம் பெறுமதியான காப்புறுதி பூட்கைகளை வழங்குவதற்கான சுரக்ஸா காப்புறுதி உடன்படிக்கைக்காக 2017 செப்தெம்பர் 07 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டிருந்ததுடன் அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் 2017 ஒக்தோபர் 02 ஆந் திகதியும் தேசிய வைபவம் 2017 செம்தெம்பர் 07 ஆந் திகதியும் நடைபெற்றன. கல்வி அமைச்சு இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் 2017 செப்தெம்பர் 07 ஆந் திகதி மேற்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஒக்தோபர் 01 ஆந் திகதியிலிருந்து 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையான காலத்துக்காக உடன்படிக்கை செய்த பெறுமதிக்கு இணங்க வரியுடன் ரூபா 2,700,00 மில்லியன் பணம் கல்வி அமைச்சால் இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. அதன் செயலாற்றல் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 4.5 மில்லியன் பாடசாலை மாணவர்களுக்கு காப்புறுதி வழங்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2017 நவம்பர் மாதத்திலிருந்து கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2018 யூன் 19 ஆந் திகதி வரை 19,017 மாணவர்களுக்கு மாத்திரம் காப்புறுதி உரிமை வேண்டுதல்கள் கிடைத்திருந்ததுடன் அவற்றில் 15,213 மாணவர்களுக்கு நலன்களாக ரூபா 163.21 மில்லியன் கிடைத்திருந்தது. பாடசாலை மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் போதியளவில் தெளிவுபடுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தும் அது முறைப்படியாக மேற்கொள்ளப்படாமை காப்புறுதி உரிமை வேண்டுதல்களின் அளவு மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்கு காரணமாக இருந்தது என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) ஒவ்வொரு மாணவனுக்கும் சுரக்ஸா மாணவர் காப்புறுதிப் பத்திரத்தை வழங்குவதற்கு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டிருந்தும் அதற்கிணங்க

நடவடிக்கை எடுக்கப்படடிருக்கவில்லை. அதன் காரணமாக மருந்துவ ஆலோசகர் அல்லது விசேட மருத்துவர்களின் கட்டணங்களிலிருந்து 20 சதவீதம் கழித்துக்கொள்வதற்கும் வதிவிட வைத்தியசாலைக் கட்டணங்களிலிருந்து 20 சதவீதத்தைக் கழித்துக் கொள்வதற்கும் உடனடி சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ளும் போது காப்புறுதியாளர்களுக்கான சிக்கல்களிலிருந்து விடுபடுவதற்கும் முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) 2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க தேசிய பெறுகை முகவராண்மைச் சுற்றறிக்கைக்கு இணங்கிய வகையிலும் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 1.2.1 ஆம் வழிகாட்டியிலுள்ள குறிக்கோள்களின் பிரகாரமும் இடம்பெற்றிருக்காத பதாதைகள் கைப்பிரதிகள் மற்றும் டீவீடீ இருவட்டு பெறுகை நடவடிக்கைகளுக்காக இரண்டு தனியார் கம்பனிகளுக்கு ரூபா 10.04 மில்லியன் செலுத்த வேண்டியிருந்தது.

(iv) 2017 ஒக்தோபர் 01 ஆந் திகதி முழுப் பக்கத்தில் மாணவர் காப்புறுதி சம்பந்தமாக அறிவித்தல்களைப் பிரசுரிப்பதற்காக 10 பத்திரிகை நிறுவனங்களுக்கும் 04 முகவர் நிறுவனங்களுக்கும் பெறுகைக் குழு அங்கீகாரமின்றி விலை மனுக்கோரல் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் குரூப் எம் மீடியா தனியார் நிறுவனத்திற்கு ரூபா 4.23 மில்லயன் பணத்திற்கு அந்நடவடிக்கை ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(v) இப்பெறுகைக் நடவடிக்கைக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு கூட்டங்கள் நடாத்தப்பட்டமைக்கு, விலை மனுக்கோரல்கள் தபால் மூலம் அல்லது கைகளால் ஒப்படைக்கப்பட்டமைக்கு, வழங்குனர்கள் அமைச்சிடம் கேட்பு மனுக்களை ஒப்படைத்தமைக்கும், மற்றும் கேள்விகள் திறக்கும் சந்தர்ப்பத்தில் அவர்கள் இருந்தமைக்கு அல்லது கேள்விகள் திறக்கப்பட்டதற்குமான சான்றுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

(vi) இதற்கான வானொலி விளம்பரத்திற்காக குரூப் எம் மீடியா நிறுவனத்திற்கு ரூபா 6.83 மில்லியனுக்கு பெறுகை வழங்கப்பட்டிருந்தது. ஏனைய எப் எம் அலைவரிசைகளுக்கு தபால் மூலம் அல்லது கைகளால் விலை மனுக் கோரல்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்தமைக்கு, கேட்பு மனுக்கள் கிடைத்தமைக்கும் திறந்தமைக்கும், பெறுகை நடவடிக்கைகளுக்கு முன்னர் பெறுகைக் குழு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டமைக்கு மற்றும் அறிவித்தல் பகிரங்கப்படுத்த வேண்டிய காலப்பகுதி குறிப்பிடப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) வானொலி பிரசித்தப்படுத்தலுக்கான 30 செக்கன் விளம்பரத்துக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் 5, 10, 14, 20, 30 ஆன செக்கன்களாக உரிய விளம்பரம் இடம்பெற்றிருந்தது. குறைந்த வான் காலம் விளம்பரம் இடம்பெற்றிருந்த போதிலும் நிர்ணயிக்கப்பட்ட மொத்த காலத்திற்கும் பணம் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதற்கினங்க விளம்பரம் செய்யாத காலத்திற்காகவும் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணம் அண்ணளவாக ரூபா 5.07 மில்லியனாகும்.

(viii) தொலைக்காட்சி விளம்பரங்களும் குரூப் எம் மீடியா பந்தியில் குறிப்பிடப்பட்ட தனியார் நிறுவனத்திற்கு ரூபா 8.51 மில்லியன் பணத்திற்கு ஒப்படைக்கப்படடிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை, கேட்பு மனு ஒப்படைத்தல், திறத்தல், கேள்வி ஆவணங்களில் விளம்பரங்கள் ஒளிபரப்பவுள்ள நாட்கள் முதலிய விடயங்களை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

(ix) ஒளிப்பரப்பு சான்றுதல் பத்திரத்திற்கு இணங்க வழங்கப்பட்டிருந்த பட்டோலையில் குறிப்பிடப்பட்டவாறு விளம்பரங்கள் ஒளிபரப்பப்பட்டமைக்கான சான்றுகள் அவதானிக்கப்படாதிருந்ததுடன் அதற்கிணங்க ஒளிப்பரப்பப்படாத காலத்திற்காக மேலதிகமாகச் செலுத்த வேண்டியிருந்த பணம் அண்ணளவாக ரூபா 7.85 மில்லியனாகும்.

(x) தொலைக்காட்சி மற்றும் வானொலி விளம்பரங்களைத் தயாரித்தலானது ரூபா 2.30 மில்லியன் விலைக்கு ஒரு தனியார் நிறுவனத்திற்கு ஒப்படைக்கட்டிருந்தது. 2017 ஒக்தோபர் 01 ஆந் திகதியிலிருந்து 31 ஆந் திகதி வரை உரிய அலைவரிசைகளில் விளம்பரப்படுத்தல் ஒக்தோபர் 26 ஆந் திகதியிலிருந்து நவம்பர் 25 ஆந் திகதி வரை விளம்பரப்படுத்தல் நடவடிக்கை இடம்பெற்றிருந்தது. உரிய செயற்பாட்டை ஒப்படைத்தல் ஒக்தோபர் 27 ஆந் திகதி இடம்பெற்றிருந்த போதிலும் அதற்கு ஒரு நாளைக்கு முன்னர் ஒக்தோபர் 26 ஆந் திகதி விளம்பர நடவடிக்கை இடம்பெற்றிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 2.1.4 தேசிய பாடசலைகளின் செயலாற்றல்

#### (அ) கொழும்பு ஆனந்தா கல்லூரி

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட தொழில் நுட்பவியல் பாட விதானத்தின் கீழ் க.பொ.த (உயர்தர) இற்காக தோற்றியிருந்த மாணவர்கள் மிகச்சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போது தொழில் நுட்பவியல் பாடவிதானத்திற்காக கல்வி அமைச்சினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) உயிரியல் முறைமைத் தொழில் நுட்பவியல் மற்றும் ஆங்கில மொழி மூலமான பொறியியல் தொழில்நுட்பவியல் என்பவற்றிற்கான ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அப்பாடவிதானத்திற்காக ஒவ்வொரு பாடசாலைக்கும் வழங்கப்படுகின்ற ஆய்வுகூட உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2015 ஆம் ஆண்டிலிருந்து 2017 செம்தெம்பர் மாதம் வரை ரூபா 17,225,871 மொத்த தொகையான பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்துவக் கட்டணங்கள் நிலுவையாகக் காணப்பட்டன.

(iv) 1993 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை வைப்புச் செய்யப்பட்ட நிலையான வைப்புக்களின் பெறுமதி 2017 சனவரி 01 ஆந் திகதியில் வட்டியுடன் ரூபா 43.14 மில்லியனாக இருந்தது. மாணவர்களின் தர அபிவிருத்திக்காக அப்பணத்தில் ஒரு பகுதியையேனும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(v) பாடசாலை அபிவிருத்தி சுங்சகத்திற்குச் சொந்தமான பஸ் ஒரு ஆண்டிற்கு 20 சதவீதப்படியான முழுமையான பெறுமதியின் அடிப்படையில் ரூபா 3,583,196 தொகை முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்படடிருந்தது. 2016 ஆம் ஆண்டிற்கான கணக்குகளின் பிரகாரம் அதனை மீள்மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) பாடசாலைக் கட்டிடத்தின் ஒரு பகுதியில் செயற்பட்டு வந்த பழைய மாணவர் சங்க அலுவலகத்திற்காக பாடசாலை அபிவிருத்தி சங்க கணக்கிலிருந்து 2017 செப்தெம்பர்

வரை மின்சாரப் பட்டியல்களைத் தீர்த்து வைப்பதற்கு ரூபா 7.27 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(vii) 2015 திசெம்பர் 31 ஆந் திகதிய 35/2015 ஆம் இலக்க கல்வி அமைச்சு சுற்றறிக்கையின் பிரகாரம் பாடசாலை உணவுச்சாலை பேணப்பட்டிருக்கவில்லை.

(viii) மோட்டார் வாகனங்கள் சம்பந்தமான 2013 ஆகஸ்ட் 30 ஆந் தகதிய ஈடீ/1/12/01/01-2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) பாடசாலைக்குச் சொந்தமான 08 வாகனங்கள் காணப்பட்ட போதிலும் அங்கீகரிக்கப்பட்ட சராசரி பதவிகளின் எண்ணிக்கை 1 மாத்திரமாகும்.

(x) வாகன ஓட்ட அட்டவணைகள் முறையாக பேணப்படாதிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 1615(அ) இன் பிரகாரம் சம்பவ குறிப்பு புத்தகங்கள் பேணப்படடிருக்கவில்லை.

(xi) 1980 செம்தெம்பர் 07 ஆந் திகதிய மூ/7/63 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் விடுதிகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(xii) 2014 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களைத் தீர்த்துவைக்கும் போது 54 நாட்களிலிருந்து 274 நாட்கள் வரையான கால தாமதம் அவதானிக்கப்பட்டது.

(xiii) 2014 இலிருந்து 2017 வரையான காலப்பகுதியின் இறுதியில் ரூபா 515,250 மொத்த தொகையான முற்பணங்கள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(xiv) பாடசாலையில் இரண்டாம் மொழி கற்பிப்பதற்காக இருவரும் பௌத்த சமய படத்திற்காக ஒருவரும் க.பொ.த (உயர்தரம்) பாடங்களுக்காக 47 பேரும் ஆக 50 ஆசிரியர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 63 ஆசிரியர் மிகைகளும் காணப்பட்டன.

(xv) ஒரு வாரத்திற்கு ஒரு பாட வேளையேனும் வழங்கப்படாதிருந்த 19 ஆசிரியர்கள், ஒரு வாரத்திற்கு 10 பாட வேளைகளை விட குறைவாக வழங்கப்பட்டிருந்த சாதாரண பாடங்களைக் கற்பிக்கும் 15 ஆசிரியர்கள் 10 பாடவேளைகளுக்கும் 20 பாடவேளைகளுக்கும் இடையில் வழங்கப்படடிருந்த 29 ஆசிரியர்கள் மற்றும் 35 பாடவேளைகளுக்கு குறைவாக வழங்கப்பட்டிருந்த சாதாரண பாடங்களைக் கற்பிக்கும் 151 ஆசிரியர்கள் பாடசாலையில் உள்ளமை அவதானிக்கப்பட்டது.

(xvi) 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக் காலத்துடன் 15 உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் இடமாற்றம் பெற்றுக்கொள்ளாது தொடர்ச்சியாக சேவையில் ஈடுபட்டிருநதனர்.

(xvii) 1964 நவம்பர் 20 ஆந் திகதிய 27 ஆம் இலக்க பழைய மாணவர் சங்க யாப்பு, சுற்றறிக்கை மற்றும் 1995 யூன் 21 ஆந் திகதிய பழைய மாணவர் சங்க சுற்றறிக்கையின் பிரகாரம் பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக பாடசாலையின் அதிபர் நியமிக்கப்பட வேண்டியிருந்தும் அவ்வாறு நியமிகக்ப்பட்டிருக்கவில்லை.

(xviii) 2017 ஆம் ஆண்டிற்கான ஆரம்ப மற்றும் இரண்டாம் பிரிவுக் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக திட்டமிடப்பட்ட ரூபா 854,000 பெறுமதியான 19

நிகழ்ச்சித்திட்டங்களில் ரூபா 750,500 பெறமதியான 10 நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(xix) பாடங்களுக்குச் சமாந்தரமாக சங்கங்களுக்கு – 19 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு ரூபா 6.27 மில்லியன் ஒதுக்கீடு செய்ய்பட்டிருந்தும் அவை நடாத்தப்படவில்லை.

(xx) 22 விளையாட்டு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 5.81 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அவை நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(xxi) பாடசாலையில் 7 நூல் நிலையங்கள் செயற்பட்டிருந்தும் கல்வி அமைச்சு செயலாளரின் 2018 ஏப்ரல் 25 ஆந் திகதிய 11/2018 ஆம் இலக்க பாடசாலைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நூல் நிலையங்கள் முறைப்படிசெயற்படுத்தப்பட்டிருந்ததுடன் பயன்படுத்தப்பட்டிருக்கவுமில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(xxii) நிதிப்பிரமாணம் 756 இன் பிரகாரம் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளுக்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான சிபார்சுகளும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(xxiii) 100 ஆண்டுகள் அளவிலான மிகவும் பழைமை வாய்ந்த மற்றும் அருமையான பல விஞ்ஞான உபகரணங்களை பேணிப்பாதுகாப்பதற்கும் காலாவதியான பெருந்தொகையான ஆய்வுகூடப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(xxiv) 41 ஆசரியர்களின் சம்பள ஏற்றங்களையும் நிலுவையாகவுள்ள சம்பள ஏற்றங்களையும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் சம்பள ஏற்ற விண்ணப்ப படிவங்களை சமர்ப்பிக்காமையின் காரணமாக 07 ஆசிரியர்களுக்கு புதிய சேவைக்குறிப்பின் பிரகாரம் உள்ளீர்ப்புச் செய்தல் பதவியுயர்வு வழங்குதல், நிலுவைச் சம்பளங்களைச் செலுத்துதல் என்பன மேற்கொள்ள முடியாதிருந்தது.

(xxv) 2016 ஆம் ஆண்டின் போது பாடசாலைகளுக்கு கிடைத்திருந்த 36 கணணிகள் நன்கொடைப் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கவில்லை.

(xxvi) 2012 செப்தெம்பர் 22 ஆந் திகதிய 2012/84 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு பாடசாலை வளவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற நீச்சல் தடாகங்களின் முழு உரிமையும் அரசாங்கத்திற்குரியதாக இருந்தும் அதற்கு இணக்கமற்ற வகையில் ஒரு தனியார் நிறுவனத்தால் நீச்சல் தடாகம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றமை அவதானிக்கக்ப்படுகின்றது.

(xxvii) சமனான தரங்களில் இருக்க வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கைக்கும் இருக்கின்ற மாணவர்களின் எணணிக்கைக்குமிடையே 455 எண்ணிக்கையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| தரம் | வகுப்புக்களின் எண்ணிக்கை | இருக்க வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை | இருக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை | மேலதிகமாகவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1-5 | 6 | 1,194 | 1,357 | 163 |
| 6-11 | 11 | 2,970 | 3,168 | 198 |
| 12-13 | - | 1,840 | 1,934 | 94 |
| மொத்தம் | | 6,004 | 6,459 | 455 |

(xxviii) பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வங்கி கணக்கில் இனங்காணப்படாத நேரடியாக செலவு வைத்தல் ரூபா 5,815,865 ஆக இருந்ததுடன் 2017 சனவரி மாதத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரை முழுப் பொறுப்புக்கள் ரூபா 47,224,775 ஆக இருந்ததனால் 12 சதவீதம் அளவானவை அவ்வாறு இனங்காண முடியாத பொறுப்புக்களாக இருந்தது.

(xxviii) பாடசாலை பதவியணியினர் சம்பந்தமாக 2014 ஆம் ஆண்டிலிருந்து தீர்ப்பனவு செய்து முடிவுறுத்தப்படாதிருந்த ஐந்து தொடக்க புலனாய்வுகள் மற்றும் ஒழுக்காற்று விசாரணைகள் காணப்பட்டன.

**(ஆ) கல்முனை ஸாஹிராக் கல்லூரி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. 2017 ஏப்ரல் 04 ஆந் திகதியிலிருந்து பாடசாலை அதிபர் பதவியில் செயற்படுகின்ற தற்போதைய அதிபர் அதற்காக முறைப்படியான நியமனக் கடிதம் வழங்கப்பட்டமை அவதானிக்கப்படவில்லை.

ii. அதிபரால் 4 பிரதி அதிபர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நியமங்களுக்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் அவதானிக்கப்படவில்லை.

iii. கல்லூரியின் 171 கல்விசார் பதவியணியினர்களுக்கும் 55 கல்விசாரா பதவியணியினர்களுக்குமாக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான விடுமுறைப் பதிவேடு நாளது வரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

iv. முற்பணம் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

v. 2017 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்காக வருடாந்ததம் பாடசாலை அபிவிருத்தி கணக்குகள் தயாரிக்கப்பட்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

vi. 2017 ஒக்தோபர் 03 ஆந் திகதி ரூபா 192,000 தொகைக்கு CCTV கமரா முறைமை கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக விலை மனுக்கள் கோரப்பட்டிருக்காததுடன் பெறுகைக் குழு அங்கீகாரமோ அல்லது மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசோ பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

vii. வாகனங்களை நிறுத்தி வைக்கும் நிலையத்தை திருத்தம் செய்வதற்காக ரூபா 330,000 தொகையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக பெறுகைக் குழுவின் அங்கீகாரம், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சு மற்றும் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

viii ரூபா 97,255 மொத்த தொகை செலவு செய்து 12 சந்தர்ப்பங்களின் போது மனைப் பொருட்கள் திருத்தம் செய்யப்பட்டிருந்ததுடன் அதற்காக பெறுகை நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ix) சமர்ப்பிக்கப்பட்ட பெறுகை ஆவணங்களில் வழங்கப்பட்ட திகதி, பெறுகை நடவடிக்கை முடிவடைந்த திகதி, திறக்கப்பட்ட திகதி என்பன குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(x) தொழில்நுட்பக் குழு சிபார்சு மற்றும் செய்த வேலைகளுக்கான சான்றிதழ்கள் இல்லாது ரூபா 59,180 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(xi) 2016 ஆம் ஆண்டுவரை பாடசாலையின் பெறுபேற்றில் முன்னேற்றம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டிற்கான பெறுபேறுகள் சிறந்த மட்டத்தில் காணப்படவில்லை. கற்பித்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீகப் பரிசோதனையின் போது வகுப்பறையில் கற்பித்தல் மேற்கொண்ட பாடவேளையின் எண்ணிக்கையானது அனேக சந்தர்ப்பங்களில் 02 பாட வேளைக்கும் 03 பாட வேளைக்கும் இடைப்பட்டுக் காணப்பட்டது.

(xii) பாடசாலையின் ஆரம்ப பிரிவு பாடசாலையிலிருந்து நீக்கப்பட்டிருந்ததுடன் அங்கே இருந்த 15 ஆசிரியர்களில் 7 பேருக்காக எதுவித செயற்பாடுகளும் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. 8 நபர்களுக்கு தற்காலிக ஒப்படைப்புக்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த ஆசிரியர்கள் நிரந்தரமாக கடமைகளில் ஈடுபடுத்தப்படாததினால் அவர்களுக்குச் செலுத்தப்படுகின்ற சம்பளம் அரசாங்கத்திற்கு ஒரு செலவுப் பொறுப்பாக இருந்தது.

(xiii) ஆசிரியர்களின் மிகைகள் காணப்பட்டிருந்தும் அவர்களிடமிருந்து சேவையைப் பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக முறையான அங்கீகாரமின்றி கல்விசாரா பதவியணிக்கு கற்பிக்கும் பாடவேளைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

(xiv) நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் காசோலைக் கொடுக்கல் வாங்கல்களின் பாதுகாப்புத் தன்மை உறுதிப்படுத்திக் கொள்ளப்படாதிருந்ததுடன் எதுவித பதிவுகளும் இன்றி வெற்றுக் காசோலைக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்க பொருளாளரால் கையொப்பமிடப்பட்டிருந்தது.

(xv) கொடுப்பனவுகள், களஞ்சிய பெறுவனவுகளும் வழங்கல்களும் உணவுச்சாலைகளையும் விடுதிகளையும் பராமரித்தல் என்பன தொடர்பாக முறையான நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) தேசிய பாடசாலைகளில் இடைக்காலங்களில் வகுப்புகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல்**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பாடசாலைகளில் 1,5 மற்றும் 6 தவிர்ந்த எஞ்சியுள்ள மேலதிக வகுப்புகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது 2008 செப்தெம்பர் 19 ஆந் திகதிய 2008/37 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டியிருந்தது. அச்சுற்றறிக்கையின் 3.4 ‘‘ஏ’’ இல் குறிப்பிடப்பட்டவாறு தேசிய பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் போது தேசிய பாடசாலைகள் பணிப்பாளரால் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டி இருந்ததுடன் பிரச்சினையான சந்தர்ப்பங்களில் அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டி இருந்தது. 2018 ஆம் ஆண்டின் போது இடைக்காலங்களில் வகுப்புகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக தேசிய பாடசாலைகளின் ஆசிரியர்களால் சமர்ப்பிக்கப்பட்ட சிபார்சு செய்யப்பட்ட பெயர்ப்பட்டியல்களுக்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நீண்டகாலம் எடுத்திருந்தது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிலவற்றின் விபரம் கீழே தரப்படுகின்றன.

- கொழும்பு 05 - இசிபந்தமான வித்தியாலயம் - 03,04,08 மற்றும் 10 ஆந் தரங்களுக்கு 58 மாணவர்கள்

- மிலாகிரிய புனித பாஉளு மகளிர் வித்தியாலயம் - 02,03 மற்றும் 04 ஆந் தரங்களுக்கு 49 மாணவர்கள்.

- கொழும்பு 07 – டீ.எஸ் சேனாநயக்க வித்தியாலயம் - 02 மற்றும் 10 ஆந் தரங்களுக்கு - 11 மாணவர்கள்.

(ii) அதிபர்களால் தவறுகளுடன் சிபாரிசு செய்யப்பட்டு பெயர்ப் பட்டியல் அனுப்பிவைத்திருந்த A தொகுதியின் 07 பாடசாலைகளில் 03 பாடசாலைகளின் 86 மாணவர்களுக்கும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாததன் காரணமாக ஒரு பாடசாலையின் 18 மாணவர்களுக்கு வேண்டப்பட்ட பாடசாலைகள் இழக்கப்பட்டிருந்தன.

(iii) B தொகுதியின் 37 பாடசாலைகளில் 13 பாடசாலைகளின் பெயர்ப்பட்டியல் அங்கீகரித்து அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் 21 பாடசாலைகளின் 509 மாணவர்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. தவறுகளுடன் பெயர்பட்டியலை அனுப்பியதன் காரணமாக 03 பாடசாலைகளின் 63 மாணவர்களுக்கு அப்பாடசாலைகள் இழக்கபட்டிருந்தன.

(iv) C தொகுதியின் 129 பாடசாலைகளில் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாததன் காரணமாக 14 பாடசாலைகளின் 541 மாணவர்களுக்கும் பெயர்பட்டியலை திருப்பி அனுப்பியதன் காரணமாக 4 பாடசாலைகளின் 172 மாணவர்களுக்கும் அப்பாடசாலைகள் இழக்கப்பட்டிருந்தன.

(v) பின்வருமாறு சில தொழில் வல்:லுனர்களின் அல்லது உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு பிரபல்யமான பாடசாலைகளில் சேர்த்து கொள்வதற்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக உறுதியான நியதிகள் நடைமுறைகள் அல்லது அறிவுறுத்தல்கள் சம்பந்தமான சான்றுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அனைத்து தொழிலில்

வல்லுனர்கள் மற்றும் தொழில் ஈடுபட்டுள்ளவர்களின் பிள்ளைகளுக்கு சமமான வாய்ப்புக்கள் உருவாகும் வகையில் விளக்கமான அறிவுறுத்தல்களுடனான சுற்றறிக்கையின் தேவைப்பாடு காணப்படுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. விபரம் கீழே தரப்படுகின்றது.

| **தொழில்வல்லுனர் / உத்தியோகத்தர்** | **சேர்த்துக்கொள்ளக்கூடிய தரம்** |
|---|---|
| மருத்துவர்கள் | 5,6 தவிர்ந்த ஏனைய தரங்கள் |
| நீதித்துறை சேவைகள் | 5,6 தவிர்ந்த ஏனைய தரங்கள் |
| பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் | 1 ஆம் தரம் மாத்திரம் |
| பாடசாலைகளின் கல்விசாரா பதவியணியினர்கள் | 1,5,6 மற்றும் 11 ஆம் தரங்கள் தவிர்த்து ஏனைய தரங்கள் |
| பாடசாலைகளின் கல்விசார் பதவியணியினர்கள் | 1,5,6 மற்றும் 11 ஆம் தரங்கள் தவிர்ந்து ஏனைய தரங்கள் |
| கல்வி அமைச்சு உத்தியோகத்தர்கள் | 1,5,6 மற்றும் 11 ஆம் தரங்களைத் தவிர்த்து ஏனைய தரங்கள் |

**(ஈ) அதிபர் வெற்றிடங்கள்**

353 தேசிய பாடசாலைகளில் 259 பாடசாலைகள் அதிபர் வெற்றிடங்களுடன் காணப்பட்டதுடன் அது 73 சதவீதமாகும். A, B, C என வகைப்படுத்தப்பட்டுள்ள தேசிய பாடசாலைகளில் மிகவும் பிரபல்யமிக்க 34 பாடசாலைகள் A தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றில் 23 பாடசாலைகள் அல்லது 67 சதவீதமான பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் காணப்படுவதுடன் இந்த அனைத்து பாடசாலைகளிலும் அதிபர் பதவிகளுக்காக பதில் கடமை நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன. பல ஆண்டுகளாகக் காணப்படும் இவ்வெற்றிடங்களை முறைப்படி நிரப்புவதற்கு இன்று வரை முடியாதிருந்தது.

(உ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 22 தேசிய பாடசாலைகளில் உடன்படிக்கைகளின் பிரகாரம் அறவிடப்படாதிருந்த உணவுச் சாலை நிலுவை வருமானம் ரூபா 855,386 ஆகும்.

(ஊ) தங்களது பாடசாலைகளில் அல்லது அருகாமையிலுள்ள பாடசாலைகளில் போதியளவிலான கேட்போர் கூடம் அல்லது மண்டப வசதிகள் இருக்கையில் 19 தேசிய பாடசாலைகள் பல்வேறு வைபவங்களுக்காக தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமான கேட்போர் கூடங்களை அல்லது மண்டப வசதிகளை பெற்றுக் கொண்டமைக்காக 2017 ஆம் ஆண்டின் போது செலவு செய்யப்பட்ட மொத்த பணம் ரூபா 10,108,627 ஆகும்.

(எ) 16 தேசிய பாடசாலைகளின் 195 ஆசிரியர்களுக்கு இரவல் வழங்கிய புத்தகங்களை மீள வழங்குதல் தாமதித்த 360 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 18 தேசிய பாடசாலைகளின் 73 ஆசிரியர்கள் இடமாற்றம், வெளிநாடு செல்லல் ஓய்வுபெறுதல், சேவையிலிருந்து விலகுதல் ஆகிய சந்தர்ப்பங்களின் போது மீள ஒப்படைக்காத புத்தகங்களின் எண்ணிக்கை 175 ஆக இருந்ததுடன் அவற்றின் பெறுமதி ரூபா 29,768 ஆகும். பெற்றுக்கொள்ளாது இந்த ஆசிரியர்கள் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அப்புத்தகங்களை பயன்படுத்துவதற்காக சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(ஐ) 2017 திசெம்பர் 31 ஆந்திகதி வரை 37 தேசிய பாடசாலைகளின் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களிலிருந்து, விடுதி நிதிகளிலிருந்து வசதிக்கட்டண மற்றும் சேவைக் கட்டண

கணக்குகளிலிருந்து அல்லது விளையாட்டு நிதியங்களிலிருந்து சம்பளங்கள் செலுத்தப்பட்டு சேர்த்துக்கொள்ளப்பட்ட கல்விசாரா பதவியணியின்ர்களின் எண்ணிக்கை 208 ஆகும். அவர்களுக்கு 2017 ஆம் ஆண்டின் போது மாத்திரம் செலுத்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் படிகள் ரூபா 28,796,964 ஆக இருந்ததுடன் அவை முழுமையாக மாணவர்களின் பெற்றோர்களுக்கு ஒப்படைக்கப்பட்ட செலவுச் சுமையாக இருந்தது.

(ஒ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 75 தேசிய பாடசாலைகளில் 406 கல்விசாரா பதவியணியினர்களின் மிகைகளும் 121 தேசிய பாடசாலைகளில் 1,198 நபர்களின் பற்றாக்குறைகளும் காணப்பட்டன.

(ஓ) 2017 ஆம் ஆண்டின் போது தர உள்ளீட்டிற்காகப் பயன்படுத்துவதற்கு 67 தேசிய பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 8,809,983 நிதி ஏற்பாட்டிலிருந்து ரூபா 3,052,471 தொகை 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் எஞ்சியிருந்துடன் அப்பணம் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் நடைமுறைக் கணக்குகளில் குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது.

(ஔ) 31 தேசிய பாடசாலைகளால் பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 4,690,697 தொகையான செயல் நிமித்த உப கட்டுநிதியானது 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.1.5 விசேட கல்விப் பிரிவுக்காக ஆசிரியர்களை இணைத்துக் கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2018 மார்ச் மாதம் வரை 47 தேசிய பாடசாலைகள் மற்றும் 210 மாகாண பாடசாலைகளில் விசேட தேவையுடனான 3423 மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக 457 ஆசிரியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் 114 ஆசிரியர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஏனைய பாடங்களுக்கு நியமனம் பெற்ற மற்றும் விசேட கல்வி தொடர்பான முறையான பயிற்சியைப் பெற்றுக் கொள்ளாத 52 ஆசிரியர்கள் விசேட கல்விப் பிரிவுகளில் கற்பித்து வருகின்றமையும் விசேட கல்விப் பிரிவுடன் சேர்த்து பாடசாலைகளின் சாதாரண வகுப்புகளுக்காக அப்பயிற்சியைப் பெற்ற 8 ஆசிரியர்கள் முழு நேரமும் ஈடுபடுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(இ) விசேட கல்விப் படாத்துறைக்காகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆசிரியர்கள் அச்சேவையிலேயே ஈடுபட வேண்டும் என 2012 நவம்பர் 23 ஆந் திகதிய 42/2012 ஆம் இலக்க கல்வி அமைச்சு செலலாளரின் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு பயிற்சி வழங்கப்பட்டிருந்த 142 ஆசிரியர்கள் விசேட கல்விப் பிரிவில் அமர்த்தப்படாது பாடசாலைகளில் கற்பித்து வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 2.1.6 அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டம்

பின்வரும் விடயங்கள் அவதாணிக்கப்பட்டன.

(அ) அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டம் தொடர்பாக 2017 ஆம் ஆண்டிற்காக 25 செலவுத்தலைப்பின் கீழ் ரூபா 26,339 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. 2017 யூன் மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரையான அரை ஆண்டிற்காக மாத்திரம் ரூபா 37,595 கட்டுநிதியாகக் கோரப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 14,724 மில்லியன் மாத்திரம் கிடைத்திருந்தது. முழு

ஆண்டிற்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்ட அளவைவிட 142.74 சதவீதம் அளவானவை இறுதி அரை ஆண்டிற்கான கட்டுநிதியாகக் கோரப்பட்டிருந்ததனால் முறையான திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. என்பது அவதானிக்கப்படவில்லை.

(ஆ) செயற்திட்டத்தின் மூலம், வகுப்பறை, மலசலகூடம், குடிநீர், கட்டிடத்திருத்தங்கள், மாணவர் கதிரை, மேசைகள் ஆகிய தேவைகள் அத்தியாவசியமானவையாகக் காணப்பட்டிருந்தும் அது சம்பந்தமாக போதிய கவனம் செலுத்தப்படாது தேவை காணப்படாத அதிபர் மற்றும் ஆசிரியர் உத்தியோக பூர்வ இல்லங்கள் நிர்ணயிக்கப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது.

(இ) அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை செயற்திட்டதின் கீழ் அபிவிருத்தி செய்ய வேண்டிய பாடசாலைகளைத் தெரிவு செய்வதற்காக முறையான நடைமுறை தயாரிக்கப்பட்டிருந்தும் அந்த நடைமுறையைப் பின்பற்றி பாடசலைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் அவதானிக்கப்படவில்லை.

(ஈ) இச் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக முறைப்படியான திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் பாடசாலைகளின் பௌதீக செயலாற்றலை மேற்பார்வை செய்வதற்கான போதிய நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மத்துகம வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது தேவைப்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கியிருக்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் தெரிவுச் செவ்வையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(i) மதுபம பான்திய மகா வித்தியாலயத்தில் தற்பொழுது கல்விகற்கின்ற மாணவர்களுக்கு குடிநீர் இல்லாமையால் நிர்மாண விடயம் 34 இன் கீழ் முதலாவது தேவைப்பாடாக இது இனங்காணப்பட்டிருந்தது. அதற்கிணங்க குடிநீர் வசதிகளை வழங்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு வழங்கப்படாது கோரப்படாதிருந்த உணவுச் சாலைகளுக்காக ரூபா 20 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டு செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

(ii) தொடங்கொட மகா வித்தியாலயத்தில் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக வகுப்பறைகள் போதியளவில் இல்லாமையால் முதலாவது தேவைப்பாடாக வகுப்பறைகளுக்கான கட்டிட வசதிகளை வழங்குமாறு மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளை நிறைவேற்றுவதற்குப் பதிலாக 36 ஆம் விடயத்தின் கீழ் வேண்டப்பட்டிருந்த முன்னுரிமைப் பதிவேட்டின் 16 ஆவது நிலையில் குறிப்பிடப்பட்டிருந்த உணவுச் சாலைகளுக்காக ரூபா 18.46 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(iii) பப/ஹொ/பலன்னொறுவ ஆரம்ப பாடசாலைக்காக போதிய வகுப்பறைகளும் ஏனைய தேவையான அம்சங்களுக்காகவும் இடவசதிகள் இல்லாமையின் காரணமாக D செயற்திட்டத்தின் கீழ் மாடிக்கட்டிடத்திற்கு போரிக்கை விடுக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரையும் அது கிடைத்திருக்கவில்லை.

(ஊ) அபிவிருத்தி செயற்திட்டங்களை மேற்கொண்டு அதற்கு ஆதரவளிக்கும் அபிவிருத்தி செயற்திட்டங்களை நிறைவேற்றாமையின் காரணமாக மேற்கொண்ட அபிவிருத்திச் செயற்திட்டங்களால் விளைதிறனற்ற சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ப/ கிரிமல்கொட மகா வித்தியாலயத்திற்கு வழங்கப்பட்ட நீரை அடிப்படையாகக் கொண்ட மலசலகூடத்திற்கு நீர் இல்லாமையின் காரணமாக பாவனைக்கு எடுத்துக் கொள்ள முடியாதிருந்தது.

(ii) மொ/எதிமலே மகா வித்தியாலயத்தில் 2013 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட 2 மலசலகூட முறைமைகள் மற்றும் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1.9 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட மலசலகூட முறைமை நீர் இல்லாமையின் காரணமாக பயன்படுத்த முடியாதிருந்தன

(எ) ஊவா மாகாணத்தில் 03 நிர்மாண வேலைகளுக்காக பிழையான செயலாற்றல் முறிகளையும் முற்பணப் பிணைகளையும் வழங்கியிருந்த இரண்டு ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 4,825,750 செலுத்தப்பட்டிருந்தது. 2017 யூன் 23 ஆந் திகதியில் அந்த நிர்மாண வேலைகளின் பௌதீக செயலாற்றல் 12 சதவீதமான குறைந்த அளவுப் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் செலுத்தப்பட்ட பணத்தின் அளவையும் நிறைவேற்றிய வேலையின் அளவையும் ஒப்பீடு செய்த போது ஒப்பந்தக்காரர்களுக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணம் ரூபா 3,742,285 ஆகும்.

(ஏ) மொத்த சனத்தொகை 225,034 மற்றும் 35,512 மாணவர்கள் உள்ள சப்ரகமுவ மாகாணத்தின் 06 பிரதேச செயலகங்களில் எப் பாடசாலையும் இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) காணப்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தும் தெரிவு செய்யப்பட வேண்டிய பாடசாலைகளின் அளவிற்கும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அளவிற்குமிடையே வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே தரப்படுகின்றன.

| **வசதிகள்** | **மாவட்டம்** | **தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை** | **தெரிவு செய்யப்பட வேண்டிய பாடசாலைகளின் எண்ணிக்கை** | **வித்தியாசம்** |
|---|---|---|---|---|
| நீர் | இரத்தினபுரி | 201 | 304 | 103 |
| | கேகாலை | 370 | 267 | 103 |
| மின்சாரம் | இரத்தினபுரி | 181 | 289 | 108 |
| | கேகாலை | 361 | 253 | 108 |

(ஒ) செயற்திட்டம் சம்பந்தமாக பத்திரிகை விளம்பரங்களைப் பிரசுரிக்கும் போது காட்டப்பட்டிருந்த கவனயீனத்தின் காரணமாக சில விளம்பரங்கள் மீண்டும் மீண்டும் திருத்தப்பட்டு பத்திரிகைகளில் பிரசுரிக்க வேண்டியிருந்ததன் காரணமாக ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்வதற்காக 2017 செம்தெம்பர் 30 ஆந் திகதி வரை ரூபா 6,506,810 தொகையான பத்திரிகை விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன.

(ஓ) ஒப்பந்த உடன்படிக்கைகள் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பங்களின் போது முற்பண பிணை முறிகளையும் செயலாற்றல் பிணை முறிகளையும் விடுவிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் 35 ஆகும்.

(ஔ) போதியளவு நிதி கிடைப்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளாது பாரிய அளவிலான நிர்மாண வேலைகளுக்காக உடன்படிக்கை செய்தல், கேள்விதாரர்கள் கேட்பு மனுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிர்மாண வேலைகள் தொடர்பாக போதியளவில் தெரியப்படுத்தாமை, ஒப்பந்தக்காரர்களின் இயலளவு இனங்காணப்படாது அதிகளவான நிர்மாண வேலைகளை

ஒப்படைத்தல், மேற்பார்வை நடவடிக்கைகள் போதியளவில் காணப்படாமையும் நிர்மாணங்கள் இடை நடுவில் நிறுத்தப்பட்டமையும் ஆகிய காரணங்களின் அடிப்படையில் இரத்து செய்யப்பட்ட நிர்மாண வேலைகள் 17 ஆகும். மேலும் 58 நிர்மாண வேலைகளுக்கான நிதி ஏற்பாடு போதியளவில் இல்லாமையிள் காரணமாக இடை நடுவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.1.7 அமுல்படுத்தப்பட்ட வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது அமைச்சிற்கு இரண்டு வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களுக்காக ரூபா 4,817 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் முறையே ரூபா 2,619.3 மில்லியன் மற்றும் ரூபா 595.64 மில்லியனாக ரூபா 3,214.95 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 1,602.06 மில்லியன் அல்லது வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 33.25 சதவீதமான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

#### (அ) அறிவுக் கேந்திர மையமாக பாடசாலைக் கல்வியை மீளமைப்புச் செய்யும் செயற்திட்டம்

2012 ஒக்தோபர் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட அறிவுக் கேந்திர மையமாக பாடசாலைக் கல்வியை மீளமைப்புச் செய்யும் செயற்திட்ட நடவடிக்கைகளை 2017 யூன் 30 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அது 2018 யூன் 30 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை வழங்குவதற்காக செயற்திட்டத்திற்கு ரூபா 30 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 5.76 மில்லியன் உபகரணங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(ii) பாடசாலைகள் அடிப்படையிலான கற்பித்தலை மேம்படுத்தல் மானியத்தின் கீழான நடவடிக்கைகளுக்காக செயற்திட்டத்திலிருந்து ரூபா 161 மில்லியன் பணம் 2017 திசெம்பர் 29 ஆந் திகதி 353 பாடசாலைகளுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. 2018 ஏப்ரல் 27 ஆந் திகதி வரை அப்பணம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. எவ்வாறாயினும் அது தொடர்பாக கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாதும் பாடசாலைகளின் நிரந்தர தேவைகளை இனங்கண்டு கொள்ளாதும் 2018 பெப்ரவரி 27 ஆந் திகதி வரை மேலும் ரூபா 50 மில்லியன் அப்பாடசாலைகளுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(iii) விசேடக் கல்வி ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல் மற்றும் விசேடக் கல்வி வழிகாட்டிக் கோவைகளின் 1000 பிரதிகளை அச்சிடுவதற்காக செயற்திட்டத்திலிருந்து ரூபா 0.5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 75 ஆசிரியாகள் மாத்திரம் பயிற்றுவிக்கப்பட்டிருந்ததுடன் உரிய வழிகாட்டிக் கோவையின் பிரதிகள் அச்சிடப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

2013 ஆகஸ்ட் 19 ஆந் திகதிய உடன்படிக்கையின் பிரகாரம் இந்நிகழ்ச்சித்திட்டங்கள் 2013 ஆகஸ்ட் 23 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி முடிவுறுத்தப்படுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரை அதன் செயலாற்றல் தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 26,000 மில்லியனுக்குச் சமமான ஐக்கிய குடியரசு டொலர் 200 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதற்காக 4 ஆண்டுகள் கடந்திருந்தது. இலங்கை அரசாங்கத்திடமிருந்து 2017 திசெம்பர் 31 வரை ஐ.கு டொலர் 167 மில்லியன் அல்லது ரூபா 21,710 மில்லியன் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தும் கல்வி அமைச்சின் செயற்திட்டத்திற்குரிய நடவடிக்கைகள் தொடர்பாக 2017 திசெம்பர் 31 வரை செலவு செய்யப்பட்ட மொத்த பணம் ஐக்கிய அமெரிக்க குடியரசு டொலர் 98.93 மில்லியன் அல்லது ரூபா 13,342.81 மில்லியன் மாத்திரமாகும்.

(ii) கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வருடாந்தம் அடைந்து கொள்ள வேண்டிய 9 பிரதான செலவுகளும் தொடர்புபட்ட பெறுபேறுகளும் அமுல்படுத்தப்பட்டுள்ளதுடன் பெறுபேறுகளை அடைந்து கொள்வதற்கு கல்வித்துறை அபிவிருத்தியின் அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களின் வெற்றித்தன்மை அடைந்து கொள்ளப்படுதல் வேண்டும். 2017 ஆம் ஆண்டின் இறுதியில் செயலாற்றலை மதிப்பீடு செய்தபோது அமைச்சின் ஒட்டுமொத்த மூலதன செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் 47.46 சதவீத அளவானவை சேமிக்கப்பட்டிருந்தது. கல்வித் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் 46.32 சதவீதமும் சேமிக்கபடப்பட்டிருந்தது. இதனை ஆண்டிற்குள் அடைந்து கொள்ளக்கூடிய செலவுகளையும் தொடர்புபட்ட குறிகாட்டி இலக்குகளையும் அடைந்து கொள்ள முடியாமைக்கு நேரடியாக தாக்கமளித்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) செலவுகள் மற்றும் தொடர்புபட்ட பெறுபேறுகள் 2 இன் பிரகாரம் க.பொ.த (உயர் தரம்) சித்தியடையும் சதவீதம் 2016 ஆம் ஆண்டில் 64 சதவீதம் மற்றும் 2017 ஆம் ஆண்டில் 65 சதவீதம் வரை முன்னேற்றமடைய வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது உரிய இலக்குகள் அடைந்து கொள்ளப்பட்டிருக்காததுடன் 2017 ஆம் ஆண்டின் போது க.பொ.த (உயர் தரம்) சித்தியடையும் சதவீதம் 66 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும் திட்டமிட்டவாறு 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஐ.அ.கு டொலர் 10 மில்லியன் உரிய காலப்பகுதிக்குள் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது.

(iv) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை மனைப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கீடு செய்யபடப்ட மொத்த நிதி ஏற்பாடு ரூபா 4,130 மில்லியனாகும். பயன்படுத்தப்படாத ரூபா 2,120.38 மில்லியன் சேமிக்கபடப்பட்டிருந்தது. தொழில்நுட்ப பாடவிதானத்தை கற்கின்ற மாணவர்களுக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு இந்த நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் பயன்படுத்தப்படாத அளவு 51.34 சதவீதமாக இருந்ததனால் தேவைப்படுகின்ற அளவில் மாணவர்களுக்கு உபகரணங்களை வழங்க முடியாததிருந்தது.

(v) 2017 ஆம் ஆண்டிற்கு மனைப்பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் ரூபா 1,700 மில்லியனாக இருந்ததுடன் ஆண்டின் இறுதிவரை அலுவலக உபகரணங்களுக்காக ரூபா 591.84 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. ரூபா 1,108.16 மில்லியன் மிகுதியாகக் காணப்பட்டது. திட்டமிடப்பட்ட சில பெறுகைகள் எதுவித காரணமும் குறிப்பிடப்படாது இரத்துச் செய்யப்படல், தொழில் நுட்ப பாடத்திட்டம் மாற்றமடைதல் ஆகிய காரணத்தால் புதிதாகப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய உபகரணப்பட்டியல் ஆண்டின் இறுதி

வரையும் தயாரிக்கப்பட முடியாமை இதற்கு காரணமாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(vi) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 வரை க.பொ.த (உயர்தரம்) அமுல்படுத்தப்பட்ட 196 தேசிய பாடசாலைகள் மற்றும் 184 மாகாண பாடசாலைகளாக ஒட்டுமொத்த பாடசாலைகளின் எண்ணிக்கை 380 ஆக இருந்ததுடன் அப்பாடசாலைகளில் பொறியியல் தொழில்நுட்பத்திற்கான ஆசிரியர்கள் வெற்றிடம் 85 ஆகவும் தொழில் நுட்பத்திற்கான விஞ்ஞான பாடத்திற்காக 142 ஆசிரியர் வெற்றிடங்களும் உயிரியல் முறைமை தொழில் நுட்பவியலுக்காக 30 ஆசிரியர் வெற்றிடங்களுமாக தொழில்நுட்பவியல் பாடவிதானத்திற்கான மொத்த ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 257 ஆக இருந்தது.

(vii) கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் செலவுகள் மற்றும் தொடர்புபட்ட பெறுபேறுகள் 5 செலவுக்ள மற்றும் தொடர்புபட்ட பெறுபேறுகள் 06 என்பன முழு நிகழ்ச்சித்திட்டத்திற்குள் அடைந்து கொள்வதற்கு எதிர்பாக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக ஒதுக்கீடு செய்யப்டப்பட ஐ.அ.கு.டொலர் 20 மில்லியன் தொகையான பணம் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்ல.

(viii) செலவுகள் மற்றும் தொடர்புபட்ட பெறுபேறுகள் 7 இன் கீழ் அதிபர்கள் மற்றும் பிரதி அதிபர்களை பயிற்றுவித்தல் உள்ளடக்கபடப்டிருந்தது. கடந்த நான்கு ஆண்டுகளும் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தி பயிற்றுவித்தல்களின் அளவு எதிர்பார்க்கபடப்ட மட்டத்தை அடைந்து கொள்ளப்பட்டிருந்தும் ஒட்டுமொத்த பாடசாலை முறைமைக்குள் எதிர்பார்க்கப்பட்ட மட்டம் சமநிலைப்படுத்தப்படாமையின் காரணமாக பயிற்றுவித்தலின் மூலம் பெறவேண்டிய நலன்களை கல்வி முறைமைக்கு உட்படுத்துதல் தொடர்பாக போதிய சான்றுகள் காணப்படவில்லை. கணக்காய்வுத் திகதி வரை 353 தேசிய பாடசாலைகளில் 259 தேசிய பாடசாலைகளில் அதிபர் வெறிறிடங்கள் காணப்பட்டதுடன் பல ஆண்டுகளாக பதில் கடமை அல்லது கடமை மேற்கொள்ளல் அதிபர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். ஒட்டு மொத்தமாக தேசிய பாடசாலைகளில் 73 சதவீதமான அதிபர் பதவிகள் இவ்வாறு வெற்றிடமாக இருந்ததுடன் அவற்றுள் A தரத்திலான பிரபல்யமிக்க 34 தேசிய பாடசாலைகளில் 23 பாடசாலைகளுமாகும். கணக்காய்வின் போது தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்ட இச்சிக்கல்களுக்கு போதியளவான தீர்வை வழங்குவதற்கு அமைச்சிற்கு முடியாதிருந்தது.

### 2.2 பெறுகை நடைமுறைகளின் மூலம் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல்

#### 2.2.1 பெறுகைகளைத் திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வேலைத் திட்டத்தின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் அமைச்சின் தேவைப்பாட்டின் பிரகாரம் முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டத்தை தயாரித்தலும், 3.1 வழிகாட்டியின் பிரகாரம் பொருத்தமான பெறுகை முறைமையைத் தெரிவு செய்தலும் 4.2.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைக் கட்டத்தையும் காலத்தையும் நிர்ணயித்தலும் இடம்பெற்றிருக்கவிலலை.

(இ) பெறுகைத் திட்டதிற்குரிய விபரம் அமைச்சின் பல கிளைகளிலிருந்து வழங்கப்படாதிருந்த போதிலும் அவர்களால் பொருட்கள் வேண்டப்பட்டிருந்தன. அவற்றில் சிலவாறாக, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, பிரிவேனா, கல்விக்கல்லூரி, நாடளாவிய 1000 பாடசாலைகள், உடற்கல்வியும் விளையாட்டும், தோட்டப் பாடசாலைகள் அபிவிருத்தி, அருகாமையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை, தரவு முகாமைத்துவம் ஆகிய கிளைகளைக் சுட்டிக்காட்டலாம்.

(ஈ) திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த வழங்கல் கிளையின் பெறுகைகளுக்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 84.70 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது.

(உ) திட்டமிடப்பட்ட 89 விடயங்களில் 17 விடயங்களுக்காக அதாவது அவற்றில் 19 சதவீதவீதத்திற்காக மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கினங்க வருடத்தின் போது எதிர்பார்த்த பெறுகைகளை மேற்கொள்ள முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஊ) 2017 திசெம்பர் 15 ஆந் திகதி திருத்திய திட்டத்திற்கு ரூபா 662.3 மில்லியன் பெறுமதியான 34 விடயங்கள் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் திருத்திய திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு மீளாய்வாண்டில் 16 நாட்கள் மாத்திரம் எஞ்சியிருந்தன.

(எ) மீளாய்வாண்டின் போது ரூபா 25,737.94 மில்லியன் தொகையான பொருட்களை வழங்கும் 115 பெறுகைகளும் ரூபா 53.44 மில்லியன் தொகையான சேவைகளை வழங்கும் 5 பெறுகைகளையும் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்படடிருந்ததும் திட்டமிடப்பட்டவாறு பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையின் காரணமாக பின்வரும் குறைபாடுகள் இடம்பெற்றிருந்தன.

(i) ரூபா 3,377.64 மில்லியன் பெறுமதியான 31 வழங்கல் பெறுகைகள் மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதி வரை இடம்பெற்றிருந்தது. அது மொத்த பெறுகைகளின் எண்ணிக்கையில் 27 சதவீதம் மற்றும் பெறுமதியில் 13 சதவீதம் அளவானவை மாத்திரமாகும்.

(ii) ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட ரூபா 203.85 மில்லியன் பெறுமதியான 10 பொருள் பெறுகைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன.

(iii) மொத்த பெறுகை நிதி ஏற்பாடுகளில் 26.6 சதவீதமான ரூபா 6862.62 பெறுமதியான 9 பொருள் பெறுகைகளை மேற்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) திட்டமிடப்பட்ட ரூபா 5,461.99 மில்லியன் பெறுமதியான 8 பொருள் பெறுகைகள் சம்பந்தமாக 2018 ஏப்ரல் மாதம் வரை கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல் முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 பெறுகை நடைமுறைகளை அமுல்படுத்தல்**

**(அ) பாடசாலைகளுக்காக கணனிகளையும் தொடர்புபட்ட உபகரணங்களையும் கொள்வனவு செய்தல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. A, B, C ஆக 3 தொகுதிகளின் கீழ் 1,727 டெஸ்க்டொப் கணனிகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2017 யூன் 14 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சிபாரிசு செய்யப்பட்ட மற்றும் கொள்வனவு செய்வதற்கு தேவையான மாதிரிகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அத்திகதியே அனைவருக்கும் கல்வி கிளையிடமிருந்து தேவைப்படுவது எந்தக் கணனி என விசாரிக்கப்பட்டிருந்தனால் மாதிரிகள் மற்றும் கேள்வி ஆவணங்களைத் தயாரிப்பதற்கு முன்னர் உள்ளபடியான தேவை இனங்காணப்பட்டது என்பதற்கான சான்றுகள் அவதானிக்கப்படவில்லை.

ii. பெறுகைக்குரிய ஒவ்வொரு கட்டமும் திட்டமிடப்பட்ட காலத்திற்குள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் தாமத காலம் 2 மாதங்களிலிருந்து 4 மாதங்கள வரை பரந்திருந்தது.

**(ஆ) அலுவலக உபகரணங்களையும் உருப்பெருக்கி (Projector) இயந்திரங்களையும் கொள்வனவு செய்தல்.**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பாடசாலைகளுக்கு 857 உருப்பெருக்கி இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக கடந்த 03 ஆண்டுகளில் ஒரு ஆண்டிற்கு ஆகக் குறைந்தது 100 உருப்பெருக்கி இயந்திரங்களை விற்பனை செய்த நிறுவனங்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்பட்டிருந்தன. அதற்காக 14 நிறுவனங்களினால் விலை மனுக்கள் அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் 02 நிறுவனங்கள் மாத்திரம் தகமைகளைப் பெற்றிருந்தன. அவற்றில் தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் அமைச்சுக்கு இந்த உபகரணங்களை வழங்கியதன் மூலமே தகமையைப் பெற்றிருந்தார் என்பது அவதானிக்கப்பட்டது.

(ii) மேலும் 81 உருப்பெருக்கி இயந்திரங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கேள்வி கோரல்களின் பிரகாரம் 15 நிறுவனங்களால் விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்படிருந்தன. தேவைப்பாட்டின் பிரகாரம் அந்த 81 இயந்திரங்களுக்கு மேலும் 25 சதவீதம் சேர்க்கப்பட்டு ரூபா 9,393,000 விலைக்கு 101 உருப்பெருக்கி இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்காக 2017 யூன் 30 ஆந் திகதி கட்டளை வழங்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக 2017 யூலை 19 மற்றும் ஆகஸ்ட் 25 ஆந் திகதிகளில் முறையே மேலும் 22 மற்றும் 28 ஆக ரூபா 2.05 மில்லியனுக்கு மற்றும் ரூபா 2.60 மில்லியனுக்கு கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க தொடக்கத்தில் 81 இயந்திரங்களுக்கு விலை மனுக்கள் கோரப்பட்டிரந்தும் 151 இயந்திரங்கள் வரை கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தன. பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.6.1(அ) வழிகாட்டியின் பிரகாரம் அவ்வாறான பெறுகைகளுக்காக தொடக்க அழைப்பு விடுக்கப்பட்ட சந்தர்ப்பத்தின் போது இனங்காணப்பட்டிருக்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் 2017 ஆம் ஆண்டிற்காக பாதீட்டு பிரேரணையின் பிரகாரம் 13 ஆண்டு கல்வி நிகழ்ச்சித்திட்டதின் கீழ் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக இப்பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்ததனால் அனைத்து உருப்பெருக்கி இயற்திரங்களின் தேவைப்பாடு அமைச்சினால் முன் அறியப்பட்டிருக்வில்லை. என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்படட்து.

(iii) தொடக்க சந்தர்ப்பத்தில் 81 உருப்பெருக்கி இயந்திரங்கள் ரூபா 9,393,000 தொகைக்கு கட்டளையிடப்படடிருந்தும் கட்டளையிடப்பட்ட அளவைவிட 86 சதவீதமானவை பின்னர் மேலதிகமாகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது பெறுகை வழிகாட்டிக்கோவையின் 3.6 (ஈ) பிரிவிற்கு இணக்கமற்றது என்பது

அவதானிக்கப்பட்டது. கொள்வனவு செய்யப்பட்ட 151 மொத்த அலகுகளுக்காக அமைச்சினால் ரூபா 14.04 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. எனவே மொத்த தேவைப்பாட்டை ஒரே தடவையில் இனங்கண்டு வேண்டப்படுவதன் மூலம் பெறுகைகளின் போது போட்டி அடிப்படையில் குறைந்த விலையைப் பெற்றுக்கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பம் இதன் காரணமாக இழக்கபட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

**(இ) எழுதும் மேற்பரப்புடனான கதிரைகளைக் கொள்வனவு செய்தல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 13 ஆண்டுகள் கல்விச் செயற்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 43 பாடசாலைகளுக்கு ஸ்மார்ட் வகுப்பறைகளுக்காக எழுதும் மேற்பரப்புடனான 4,524 கதிரைகள் ரூபா 5,200 வீதம் ரூபா 23,615,280 வரியற்ற விலைக்கு ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்வதற்கு 2017 செப்தெம்பர் 19 ஆந் திகதி சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

(ii) இந்த நிறுவனம் முன் அனுபவத்தை சமர்ப்பித்ததாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும் உரிய கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்த போது அது பற்றிய சான்றுகள் அவதானிக்கப்படவில்லை.

(iii) கேட்பு மனுக்களைச் சமர்ப்பித்த ஏனைய நிறுவனங்களுக்கு மத்தியில் ரூபா 16,286,400 தொகையான கேட்பு மனுக்களைச் சமர்ப்பித்த தனியார் நிறுவனம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கு காரணமாக ஒரு ஆண்டு உத்தரவாத காலம் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அவர்களால் 3 ஆண்டகள் உத்தரவாத சான்றிதழ் சமர்ப்பிக்கபடப்டமைக்கான சான்றிதழ் அவதானிக்கப்பட்டது.

(iv) மாதிரிகள் மற்றும் விபரக் குறிப்புக்கள் பொருந்தியிருக்காததனால் இன்னும் ஒரு நிறுவனத்தையும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நிராகரித்திருந்த போதிலும் (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிறுவனத்தின் மாதிரிப் பொருட்களின் பிரகாரம் கதிரைக் கைப்பிடியின் சரிவை அதிகரிக்க வேண்டுமெனக் குறிப்பிட்டு அந்த திருத்தத்தை மேற்கொண்டதன் பின்னர் கொள்வனவு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக விபரக்குறிப்பின் பிரகாரம் மாதிரிகளில் இருக்க வேண்டியவற்றிற்கும் நிசாகோ நிறுவனத்தின் மாதிரிகளுக்குமிடையே பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

| விபரம் | இருக்க வேண்டியது | இருந்தது |
|---|---|---|
| பின்பக்கம் சாய்ந்துள்ள பகுதி | துணியால் மூடப்பட்ட 25 மி.மீற்றர் பொலிபோம் பிளாஸ்ரிக் பின்பக்க கவர் | துணியால் மூடப்பட்ட 12.5 மி.மீற்றர் பொலிபோம் பிளாஸ்ரிக் கவர் |
| ஆசனம் | துணியால் மூடப்பட்ட 25 மி.மீற்றர் பொலிபோம் பிளாஸ்ரிக் கீழ்பக்க மறைப்பு | துணியால் மூடப்பட்ட 12.5 மி.மீற்றர் பொலிபோம் பிளாஸ்ரிக் கீழ் மறைப்பு |

| | | |
|---|---|---|
| முடிவுறுத்தல் | இரண்டு தடவைகள் அண்டி குரோஸ்ட் மற்றும் இரண்டு தடவைகள் கடும் பழுப்புநிற எனாமல் வர்ணம் பூசப்பட்ட ட்ரயியூலர் ஸ்டீல் | வெளியில் தெரியாத பகுதி எதிர்பார்க்கப்பட்ட நியமத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

(v) எழுதும் மேற்பரப்புடனான கதிரையின் பிரதான பகுதியாகக் கருதப்படுகின்ற எழுதும் மேற்பரப்பிற்குத் தேவையான பலகையின் நியமம் மாதிரி விபரக்குறிப்பில் உறுதியாகக் குறிப்பிடப்பட்டிரக்காததுடன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.6 ஆம் வழிகாட்டி தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருந்தமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

**(ஈ) உயர்தர மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்காக டெப் கணனி கொள்வனவு செய்தல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2017 வரவு செயவுத்திட்டப் பிரேரணை 92 இன் கீழ் ரூபா 5,000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான 195,148 டெப் கணனிகளைக் கொள்வனவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டின் போது அந்த நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாததன் காரணமாக திறைசேரிக்கு திருப்பி அனுப்ப வேண்டியிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் போது மீண்டும் ரூபா 5000 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) எவ்வாறாயினும், 2018 பெப்ரவரி 20 ஆந் திகதி டெப் கணனிகளைக் கொள்வனவு செய்தல் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படடிருந்ததுடன் அதுவரைக்குமான பகிரங்கப்படுத்தல் நடவடிக்கைகள மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்ட பணம் ரூபா 452,025 ஆகும்.

**(உ) கிரீன் போர்ட், மெதிபோட், பிளக்போட் கொள்வனவு செய்தல்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அருகாமையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1925 பாடசாலைகளுக்கு 18,200 மெதிபோட்கள், 6,360 கிரீன்போட்கள் மற்றும் 25 பிளா் போட்களை கொள்வனவு செய்வதற்காக 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 155.7 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பொருட்களின் பெறுகைக்கான பத்திரிகை விளம்பரம் 2016 திசெம்பா் 30 ஆந் திகதி வெளியிடப்பட்டிருந்தது.

(ii) சமா்ப்பிக்கபடப்ட விலை மனுக்களின் பிரகாரம் ஒரு தனியாா் நிறுவனத்திடமிருந்து ஒன்று 4200 படி 18200 மெதிபோட்கள் மாத்திரம் ரூபா 76,440,000 விலைக்கு கொள்வனவு செய்வதற்கு 2017 ஏப்ரல் 24 ஆந் திகதி தீா்மானம் எடுக்கப்படடிருந்த போதிலும் கிரீன் போட்கள் மற்றும் பிளக் போட்களை கொள்வனவு செய்யும் தேவைப்பாடு இல்லை எனக் கருதி நடவடிக்கை எடுக்கப்படடிருந்தது. அதற்கிணங்க தேவைப்பாட்டை சரியாக இனங்கண்டு உறுதியான அடிப்படையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(iii) பெறுகைகளை ஒப்படைக்கும் தொடக்க சந்தர்ப்பத்தில் தீர்மாணிக்கப்பட்ட 1925 பாடசாலைகளுக்கு 18200 போட்கள் 2017 யூலை 12 ஆந் திகதி வரை பகிர்ந்தளித்தல் முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்படாது அது மாற்றம் செய்யப்பட்டு ஒரு பாடசாலைக்கு 20 போடகள் படி 900 பாடசாலைகளுக்கு 18000 போட்களை பகிர்ந்தளிப்பதற்காகத் தயாரிக்கபடப்ட பட்டியல் வழங்குனருக்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க பெறுகையின் தேவைப்பாடு உறுதியாக இனங்காணப்பட்டிருந்தது என்பது அவதானிக்கபட்டிருக்கவில்லை.

(iv) வெளிநாட்டிலிருந்து பொருட்கள் வழங்கப்பட வேண்டியுள்ளது என்பது பெறுகை நடைமுறைகளில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் வெளிநாட்டுப் பொருட்களை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் இரண்டு தடவை கால நீடிப்பை வேண்டியிருந்தார்கள். அதற்கிணங்க 2017 செப்தெம்பர் 12 ஆந் திகதி வரை 62 நாட்கள் கால நீடிப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2017 யூலை 12 ஆந் திகதியிலிருந்து 2017 செப்தெம்பர் 12 ஆந் திகதி வரையான காலத்தின் போது எந்த போட்களும் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2017 ஏப்ரல் 27 ஆந் திகதி அமைச்சு பெறுகைக் குழுவின் மூலம் மேலும் 1,233 மெதி போட்கள் ஒன்று ரூபா 4,200 படி ரூபா 5,178,600 விலைக்கு அந்த நிறுவனத்திடமிருந்தே மீண்டும் கொள்வனவு செய்வதற்கு 2017 மே 23 ஆந் திகதி கட்டளையிடப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக மேலும் 16,945 மெதி போட்கள் ஒன்று ரூபா 3.339.13 இற்கு கொள்வனவு செய்வதற்கு 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி மற்றுமொரு தனியார் கம்பனிக்கு பெறுகை வழங்கப்பட்டிருந்தது.

(vi) இதற்கு மேலதிகமாக அந்த மாதிரிகளுக்குச் சமனான 16,973 மெதி போட்கள் 839 பாடசாலைகளுக்காக ஒரு பாடசாலைக்கு 20 வீதமும் 193 ஆலோசனை நிலையங்களுக்கு ஒன்று வீதமும் கொள்வனவு செய்வதற்கு 2017 மே 29 ஆந் திகதி கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் 2017 யூன் 20 ஆந் திகதியளவில் 9 வழங்குனர் அதற்காக பதிலளித்திருந்தார்கள். அவற்றில் ரூபா 3,339.13 ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்திருந்த மற்றுமொரு தனியார் கம்பனிக்கு 16,945 அலகுகளை ரூபா 56,581,558 வரியற்ற விலைக்கு 2017 நவம்பர் 28 ஆந் திகதியளவில் வழங்குவதற்காக 2017 ஆகஸ்ட் 30 ஆந் திகதி பெறுகை வழங்கப்பட்டிருந்தது. அந்த வழங்குனர் 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் உரிய வழங்கலை பூர்த்தி செய்திருந்ததுடன் 2017 திசெம்பர் 20 ஆந் திகதி வரை நாட்களை நீடிப்புச் செய்திருந்தார்.

(vii) மேலே(ii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிறுவனம் உரிய வழங்கலை மேற்கொள்வதனை எட்டு மாதங்களுக்கு மேற்பட்ட காலம் தாமதிருத்ததுடன் வழங்கல் முறையாக இடம்பெறாத சந்தர்ப்பங்களில் ஒப்பந்த உடன்படிக்கையின் 34.1 ஆம் பிரிவின் பிரகாரம் உடன்படிக்கையை முழுமையாக அல்லது பகுதியளவில் இரத்துச் செய்வதற்கு அல்லது பெறுகை ஆலோசனைப் பத்திரத்தின் 40 ஆம் பிரிவின் பிரகாரம் தற்பொழுது காணப்படுகின்ற விலையில் 25 சதவீதம் அளவில் மாற்றம் செய்து (vi) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தனியார் நிறுவனத்திற்கு வழங்கக் கூடியதாக இருந்தும் அவ்வாறு இடம் பெற்றிருக்கவில்லை. அவ்வாறு 25 சதவீதமானது (ii) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிறுவனத்தின் வழங்கலிருந்து குறைத்து (vi) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கியிருந்தால் அமைச்சிற்கு அந்த வழங்கலை உரிய வேலைக்கு வழங்கவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பு இருந்ததாகவும் அண்ணளவாக ரூபா 3,646,645 அளவான பணத்தை சேமிக்ககூடிய வாய்ப்பு இருந்ததாகவும் அவதானிக்கப்பட்டது.

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(அ) சொத்துக்களை பதிவேட்டில் பதிதல்

2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தியின் பிண்ணிணைப்பின் பிரகாரம் பின்வரும் சொத்துக்களின் விபரத்தை 2017 திசெம்பர் 31 இற்கு முன்னர் கொம்ட்ரோலர் ஜெனராலுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஏப்ரல் 20 ஆந் திகதி வரை அவ்வாறு செய்திருக்கவில்லை.

| சொத்துக்களின் வகை | சுற்றறிக்கையின் பிரகாரம் பின்னிணைப்பு இலக்கம் | சமர்ப்பிக்கப்பட வேண்டிய திகதி |
|---|---|---|
| நியமனம் தொடர்பான தகவல்கள் | பின்னிணைப்பு iv | 2017.09.30 |
| கட்டிடம் தொடர்பான தகவல்கள் | பின்னிணைப்பு v | 2017.10.31 |
| காணிகள் தொடர்பான தகவல்கள் | பின்னிணைப்பு vi | 2017.11.30 |

**(ஆ) கிரயம் மற்றும் செயற்திறனின்றி சொத்துக்களை விற்றுத் தீர்த்தல்**

தேசிய பாடசாலைகளில் பாவனையிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட மாணவர் கதிரை, மேசை, அலுவலக உபகரணங்கள் விளையாட்டு உபகரணங்கள் முதலியவை அதிக அளவில் குவித்துவைக்கப்பட்டிருந்தும் மெய்மையாய்வுச் சபையின் சிபார்சின் அடிப்படையில் அல்லது 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கையின் பிரகாரம் அச்சொத்துக்களை விற்றுத்தீர்க்காததன் காரணமாக பொதுச் செயற்பாட்டுச் செலவுகள் அதிகரிப்பதற்கும் தொடக்க சந்தர்ப்பத்தில் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்த பொருளாதார நலன்கள் கிடைக்காமல் போவதற்கும் காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) வாகனப் பயன்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 1985 யூன் 10 ஆந் திகதிய 289 ஆம் இலக்க 1992 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய 26/92 ஆம் இலக்க மற்றும் 1994 ஆகஸ்ட் 03 ஆந் திகதிய 26/92(1) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க வாகனங்களில் அரசாங்க இலச்சினை பொறிக்கப்பட வேண்டி இருந்தது. 2002 பெப்ரவரி 25 ஆந் தகிதிய 01/2002 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையானது மேலே கூறப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் அரசாங்க இலச்சினையைப் பொறிப்பதற்கும் அதற்கு மேலதிகமாக நிறுவனத்தின் பெயரையும் குறிப்பிடுவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அமைச்சின் வாகனங்கள் சம்பந்தமாக அதற்கிணங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அமைச்சிற்குச் சொந்தமான 15 வாகனங்களுக்காக 2017 ஆம் ஆண்டின் போது எரிபொருள் மற்றும் பராமரிப்புச் செலவுகளுக்காக ரூபா 9.18 மில்லியன் செலவு

செய்யப்பட்டிருந்தும் அவ்வாகனங்களைப் பயன்படுத்தியமை தொடர்பான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 115 வாகனங்கள் சம்பந்தமாக பேணப்பட்டு வந்த நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் வாகனங்கள் சம்பந்தமான நிலையான சொத்துக்கள் பதிவேடு முறைப்படியாகவும் நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

(iv) அமைச்சின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்ட 68 வாகனங்களுக்கு பதிவுச் சான்றிதழ் இல்லாததனால் அவற்றின் உரிமையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

(v) அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்ட 146 வாகனங்களைப் பயன்படுத்தும் உத்தியோகத்தர்களும் அவ்வாகனங்களை நிறுத்தி வைக்கும் இடங்களும் தொடர்பான விபரம் / சான்று கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

(vi) சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த 35 வாகனங்கள் பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) அமைச்சின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த எனினும் அமைச்சுக்கு சொந்தமில்லாத 22 வாகனங்களை அமைச்சினால் பொறுப்பேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(viii) அமைச்சின் பயன்பாடடிற்காக 2017 ஆம் ஆண்டின் போது முறையே ரூபா 4.10 மில்லியன் மற்றும் ரூபா 3.99 மில்லியனாக மொத்தம் ரூபா 8.09 மில்லியன் செலவு செய்து இரண்டு வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

**(ஈ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொண்டு அந்த அறிக்கையை சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் அல்லது சுற்றறிக்கையின் 3.2.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 யூன் 15 அந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், அமைச்சினால் 175 தேசிய பாடசாலைகள் 41 ஆசிரியர் நிலையங்கள் 51 கணனி நிலையங்கள் பத்தல கெதர களஞ்சியம் என்பவற்றிலுள்ள பொருட்களை மெய்மையாய்வு செய்து பூர்த்தி செய்து அந்த அறிக்கை 2018 யூன் 20 ஆந் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2016 ஆம் ஆண்டிற்கே நடாத்தப்பட்டிருந்தது.

**(உ) ஒப்படைக்கப்படாத சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பாதுகாப்புச் சேவைக் கல்லூரிக்குத் தேவையான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக 2008 ஆம் ஆண்டிலிருந்து கல்வி அமைச்சுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,192 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 1,098 மில்லியன் செலவு செய்து நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான 1.9329 ஹெக்டெயர் காணியில் கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் கல்லூரி காணியின் மற்றும் கட்டிடங்களின் சட்டரீதியான

உரிமையை மீளாய்வாண்டின் இறுதி வரை கல்வி அமைச்சினால் பொறுப்பேற்பதற்கு முடியாதிருந்தது.

(ii) வெயங்கொடை சியனே கல்விக் கல்லூாயீல் அமைந்துள்ள 85 ஏக்கர்களைக் கொண்ட காணியின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக எழுத்து மூல சான்று காணப்படவில்லை.

**2.4 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்**

**வருடாந்த பாதீட்டு எல்லைகளை மிகைத்து கடப்பாடுகளை ஏற்படுத்துதல்.**

2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் 02(அ) பந்திக்கு இணக்கமின்றி 32 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை மிகைத்து ரூபா 7,758 மில்லியன் கடப்பாடுகள் ஏற்பட்டிருந்தது.

**2.5 நட்டங்களும் சேதங்களும்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத 91 நட்டங்கள் மற்றும் சேதங்கள் காணப்பட்டதுடன் அந்நட்டங்கள் மற்றும் சேதங்கள் 03 மாதங்களிலிருந்து 18 ஆண்டுகள் வரையான கால வீச்சினையுடையதாகும். அவற்றில் 36 சந்தர்ப்பங்களின் போது இடம்பெற்றிருந்த நட்டத்தின் மொத்தப் பெறுமதி ரூபா 8.28 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய 55 சேதங்களின் நட்டம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் உரிய நட்டத்தை பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 9 மாகாணங்களில் விசேட தேவையுடைய மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்காக தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் வளங்கள் மற்றும் தகவல் நிலையங்களை தோற்றுவிக்கும் குறிக்கோளுக்காக 2007 ஆம் ஆண்டின் போது வெளிவெல்கொலவில் அமைந்துள்ள ஒரு பாடசாலை தெரிவு செய்யப்பட்டிருந்தது. அதன் செயல்முன்னேற்றம் சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) உரிய காணியின் முழு உரிமையையும் கல்வி அமைச்சினால் பொறுப்பேற்பதற்கு 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை முடியாதிருந்தது.

(ii) வள நிலையத்தின் மருத்துவ ஓய்வறை, நிருவாகம் மற்றும் மதிப்பீட்டு கட்டிடங்கள் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் கேட்போர் கூடம், உணவுச் சாலை என்பவற்றின் நிர்மான நடவடிக்கைகள் அரைவாசியாகப் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. விடுதிகள், உத்தியோகபூர்வ இல்லம், தொழில் பயிற்சிக் கட்டிடம், விளையாட்டு மைதானம் விளையாட்டுச் சபை என்பவற்றின் நிர்மான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படடிருக்கவில்லை.

(iii) இதற்கிணங்க 2007 ஆம் ஆண்டிலிருந்து திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 10 ஆண்டுகளை மிகைத்து விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான இந்த வள நிலையங்களை விளைதிறனாகப் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டன. எவ்வாறாயினும் 2019 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தக்கூடிய வகையில் 2018 திசெம்பர் மாதத்தில் திறந்து வைப்பதற்கு உத்தேசிக்கப்படுவதாக கணக்காய்விற்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

(iv) 1993 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாக நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் சீருடைகளுக்காக குறித்த நிறங்களையுடையதும் வயதுத் தொகுதிக்கு அளவான வகையிலும் சமமான தரத்தினையுடையதுமான துணிகள் வழங்கப்படடிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிலிருந்து வவுச்சர் முறைமைக்கு மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டிற்கான சீருடைகளைப் பகிர்ந்தளிப்பதற்காக 4,165,964 எண்ணிக்கையான நலன்பெறுனர்கள் இனங்காணப்பட்டிருந்தனர். அவர்களுக்காக ரூபா 2,493.9 பெறுமதியான 4,326,951 வவுச்சர்கள் ரூபா 17.4 மில்லியன் செலவு செய்து அச்சிடப்படடிருந்தது. 2018 ஆம் ஆண்டிற்காக இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியின் மூலம் செலுத்தப்பட்ட மொத்த பணம் ரூபா 3,290.4 மில்லியனாக இருந்ததுடன் மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 796.5 மில்லியன் சப்பாத்துக்கள் அன்பளிப்புக்களுக்காக செலுத்தப்பட்டிருந்ததாக கணக்காய்விற்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களிலிருந்து அப்பணம் சப்பாத்துக்கள் அன்பளிப்புக்களுக்காகச் செலுத்தப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) அமைச்சிற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 19 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2018 யூலை 12 ஆந் திகதி வரையும் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 1,877.6 மில்லியனாக இருந்தது.

**2.7 பொதுமக்களின் தேவைப்பாடு மற்றும் முறைப்பாடுகளுக்காக அமைச்சிற்கு புதன் கிழமைகளில் வருகை தரும் பொது மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுதல்.**

---

அமைச்சின் மூலம் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக 2017 யூன் மாதத்திலிருந்து ஆகஸ்ட் மாதம் வரை புதன் கிழமைகளில் வருகை தந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 6,963 ஆகும். அது ஒரு நாளைக்கு 565 இலிருந்து 935 வரையான வீச்சில் காணப்பட்டது. அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மீளாய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அவ்வாறு பல்வேறு பிரதேசங்களிலிருந்து வருகைதந்த நபர்கள் தொடர்பாக 2017 ஆகஸ்ட் 16 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட மீளாய்வின் பிரகாரம் ஒரே காரணத்திற்காக 2 தடவைகளிலிருந்து 15 தடவைகள் வரை வருகை தந்து ஒவ்வொரு உத்தியோகத்தர்களைச் சந்தித்திருந்தும் அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ii) பொது மக்களின் வருகைகளைப் பதிவு செய்தல், கணனி மயப்படுத்தல், கோவை செய்தல் என்பன இடம்பெற்றிருந்த போதிலும் உரிய சிக்கல்களுக்கு தீர்வு காணப்படாததன் காரணமாக மீண்டும் மீண்டும் அவர்கள் வருகை தருவதனால் அது தொடர்பான முறைப்படியான பின்தொடர் நடவடிக்கை இடம்பெறுகின்றன என்பது அவதானிக்கப்படவில்லை.

(iii) உரிய முறைப்பாடு தொடர்பாக கேட்டு தீர்வு பெறுவதற்காக ஒவ்வொரு பிரச்சினை சம்பந்தமாக செயற்படும் உத்தியோகத்தர்களைச் சந்திப்பதற்கு முடியாமையின் காரணமாக

பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகள் நிறைவேற்றப்படவில்லை. என்பது அவதானிக்கப்பட்டது.

(iv) பிரச்சினைகளை உறுதியாக இனங்கண்டு கொள்ளாமை ஒரே சமமான பிரச்சினைகள் சம்பந்தமாக அனைத்து நபர்களையும் ஒரே வகையில் கவனிக்காமை நேரடியான பதில்கள் வழங்காமை, உரிய இடத்திற்கு அனுப்பிவைக்காமை என்பன தொடர்பான சிக்கல்கள் காணப்படுகின்றமை அவதானிக்க்பட்டது.

## 2.8 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கக்படப்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடு பயன்பாடு சேமிப்பு என்பன தொடர்பான தகவல்களும் அவை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்களும் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறி நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 28,875 | 28,656 | 219 | 0.76 |
| | மூலதனம் | 8,484 | 7,544 | 940 | 11.08 |
| | **மொத்தம்** | **37,359** | **36,200** | **1,159** | **3.10** |
| 2014 | மீண்டுவருபவை | 26,175 | 26,105 | 71 | 0.27 |
| | மூலதனம் | 15,057 | 14,680 | 376 | 2.5 |
| | **மொத்தம்** | **41,232** | **40,785** | **447** | **1.08** |
| 2015 | மீண்டுவருபவை | 41,104 | 40,747 | 357 | 00.87 |
| | மூலதனம் | 17,347 | 15,536 | 1,811 | 10.44 |
| | **மொத்தம்** | **58,451** | **56,283** | **2,168** | **03.71** |
| 2016 | மீண்டுவருபவை | 167,250 | 45,396 | 121,854 | 72.86 |
| | மூலதனம் | 31,336 | 15,115 | 16,222 | 51.77 |
| | **மொத்தம்** | **198,586** | **60,511** | **138,076** | **69.53** |
| 2017 | மீண்டுவருபவை | 54,985 | 49,139 | 5,846 | 10.63 |
| | மூலதனம் | 52,577 | 27,623 | 24,954 | 47.46 |
| | **மொத்தம்** | **107,562** | **76,762** | **30,800** | **28.63** |

### (அ) வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமை

15 மூலதன செலவு விடயங்கள் மற்றும் 10 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 6,163.56 மில்லியன் கூட்டு மொத்தமான தேறிய நிதி ஏற்பாடு எதுவித பயன்பாடுமின்றி முழுமையாகச் சேமிக்கப்டப்டிருந்தது.

**(ஆ) அதிக நிதி ஏற்பாட்டை வழங்குதல்**

45 செலவு விடயங்களுக்காக ரூபா 22,121.71 மில்லியன் கூட்டுமொத்தமான மிகை நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக அச்செலவு விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டில் ரூபா 6,270.92 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக சேமிப்பானது வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 40 சதவீதத்திலீருந்து 99 சதவீதம் வரையான வீச்சுடைய அளவாக காணப்பட்டது.

**(இ) குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடுகளின் மூலம் நிதி ஏற்பாட்டை வழங்குதல்**

குறை நிரப்பு மதிப்பீட்டின் கீழ் க.பொ.த (உயர்தரம்) மாணவர்களுக்கு டெப் கணனிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 5,000 மில்லியனும் பதவியணியினர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்குக்காக ரூபா 6 மில்லியனும் வாடகை அடிப்படையில் கணனிகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 5000 மில்லியனும் ஆக ரூபா 10,006 மில்லியன் கூட்டு மொத்த நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

**2.9 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 12601 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | இழிவு எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| 1,700 | 1,585 | 980 | 1,038 | 3,500 | 2,497 |

இது சம்பந்தமான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 223.5 மில்லியன் கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந்த நிலுவையாக இருந்த மீதிகளில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்டு வரும் இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வுபெற்ற, மரணமடைந்த, சேவையை விட்டுச்சென்ற, வேலையிலிருந்து இடை நிறத்தப்பட்ட மற்றும் ஏனைய ரூபா 112.20 மில்லியன் நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு அமைச்சிற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட இணக்க கூற்றுக்களின் பிரகாரம் திணைக்களத்தின் ஏடுகளுக்கும் திறைசேரியின் ஏடுகளுக்குமிடையே ரூபா 1.2 மில்லியன் கூட்டு மொத்த தீர்த்து வைக்கப்படாத தவறுகள் காணப்பட்டன. அவற்றுள்05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாககக் காணப்பட்டு வரும் ரூபா 138,775 மீதியும் காணப்பட்டது.

(இ) தனித்தனி மீதிகளை வகைப்படுத்தல் பொழிப்பின் பிரகாரம் வேலையிலிருந்து இடை நிறுத்திவைக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதிகளாக ரூபா 2.7 மில்லியன் காட்டப்பட்டிருந்தது. பெற வேண்டியுள்ள கடன் காலப் பகுப்பாய்வின் பிரகாரம்

அது ரூபா 1.8 மில்லியனாகும். அதற்கிணங்க ரூபா 829,420 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஈ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு தனித்தனி மீதிகளை வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத் தொகைக்கும் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிக்குமிடையே இனங்காணப்படாத வித்தியாசம் ரூபா 1.4 மில்லியனாகும்.

(உ) 2014 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க சுற்றிற்கையின் 3.2 ஆம் இலக்க பந்தியில் உச்ச செலவு எல்லைக்குள் போதியளவு நிதி ஏற்பாடு காணப்படுமாக இருந்தால் மாகாண சபையிலிருந்து இடமாற்றம் பெற்று வந்துள்ள கடன் மீதிகளை ஒரே தடவையில் பொறுப்பேற்றல் வேண்டும். அவ்வாறு போதிய நிதி ஏற்பாடு இல்லாதிருந்தால் இடமாற்றம் பெற்று வந்துள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் பொறுப்பேறகப்படாதிருக்க வேண்டுமெனவும் ஒவ்வொரு மாதமும் அவர்களின் சம்பளங்களிலிருந்து அறவிடப்படுகின்ற கடன் தவணைப் பணத்தையும் வட்டியையும் உரிய மாகாண சபைக்கு பணமாக அனுப்பி வைக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மாகாண சபைகளிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை உரிய மாகாண சபைகளிடமிருந்து ஒரே தடவையில் அறவீடு செய்வதற்கு அல்லது தவணை அடிப்படையில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக மத்திய மாகாண கல்வி அலுவலகத்தின் 139 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 5.2 மில்லியன் பணம் மாகாண சபைக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய மீதியாகக் காணப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.10 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள 05 பொது வைப்புக் கணக்குகளின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 819 மில்லியனாகும். அவற்றில் 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 9.37 மில்லியன் கூட்டு மொத்தமான 03 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிகதை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் சில பதிவேடுகள் முறைப்படியாகவும் நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | நிதிப்பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| வாகன சம்பவ குறிப்பு புத்தகம் | நிதிப்பிரமாணம் 1645(அ) மற்றும் 1647 (உ) | முறைப்படியாகவும் நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. |

**2.12 இணக்கமின்மைகள்.**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்.**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள். |
| --- | --- |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | |
| (i) தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 1.2, 13.2 மற்றும் 22.1.1. ஆம் பிரிவுகள் | (i) அமைச்சு, தேசிய பாடசாலைகள், கல்விக் கல்லூரிகள் மற்றும் அமைச்சிற்குரிய ஏனைய நிறுவனங்களில் தீர்த்து முடிவுறுத்தப்படாதிருந்த ஒழுக்காற்று பரிசோதனைகளின் எண்ணிக்கை 554 ஆகும். அதிபர் பதவிகள் தொடர்பான 110 ஒழுக்காற்று பிரச்சினையையும் கல்வி சார் மற்றும் கல்விசாரா பதவிகள் தொடர்பான 444 ஒழுக்காற்று பிரச்சினைகளையும் அவை உள்ளடக்கியிருந்தன. |
| | (ii) தீர்த்து வைக்கப்படாத ஒழுக்காற்று பிரச்சினைகளுக்கு மத்தியில் 9 ஆண்டுகளை மிகைத்த 2 பிரச்சினைகளும் 5 ஆண்டுகளை மிகைத்த 40 பிரச்சினைகளும் 2 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்குமிடைப்பட்ட 101 பிரச்சினைகளும் காணப்பட்டன. |
| | (iii) இந்த ஒழுக்காற்று பிரச்சினைகளுக்குள் பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது தொடர்பான 107 முறைப்பாடுகள் காணப்பட்டதுடன் 2012 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டுவரும் இந்த முறைப்பாடுகளில் 16 மாத்திரம் தீர்த்து வைக்கப்பட்டிருந்தன. |
| | (iv) தீர்த்து வைத்து முடிவுறுத்தப்படாத பல ஒழுக்காற்று கோவைகள் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br>* நீர்கொழும்பு நிவுஸ்டட் கல்லூரியின் முறையீனங்கள் சம்பந்தமான உள்ளக விசேட கணக்காய்வு பரிசோதனையின் சிபார்சின் பிரகாரம் தொடக்க புலனாய்வு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் எடுத்திருந்தது. |

* குற்றமிழைத்த உத்தியோகத்தருக்கு எதிராக குற்றப் பத்திரம் வழங்கப்பட்டு ஒரு ஆண்டிற்குள் விசாரனையைப் பூர்த்தி செய்து ஒழுக்காற்று கட்டளையை அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் ED/05/92/(9) 2013 (16) ஆம் இலக்க புலனாய்வு அறிக்கை மற்றும் ED/05/72/02/04/383 ஆம் இலக்க ஒழுக்காற்று கோவை சம்பந்தமாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

* குருனாகல் மலியதேவா ஆண்கள் பாடசாலைக்கு 2014 ஆம் ஆண்டில் முதலாம் தரத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வது சம்பந்தமாக அப்போதைய அதிபருக்கு எதிரான முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஒழுக்காற்று விசாரனையின் பிரகாரம் 2016 மே 24 ஆந் திகதி குற்றப் பத்திரம் வழங்கப்பட்டிருந்தும் அதற்கிணங்க ஒழுக்காற்று நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2017 யூலை 18 ஆந் தகிதி 60 வயது பூர்த்தியடையாததன் காரணமாக அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாது அவர் ஓய்வு பெற்றிருந்தார்.

(ii) தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 1.1 ஆம் பிரிவு

விடுமுறைகளுக்காக முறையான அங்கீகாரம் பெறவேண்டியிருந்த போதிலும் அதற்கு இணக்கமற்ற வகையில் 2017 ஆம் ஆண்டின் போது 27 தேசிய பாடசாலைகளின் 107 .கல்விசார் மற்றும் கல்விசாரா .பதவியணியினர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மொத்த விடுமுறை நாட்களின் எண்ணிக்கை 3,428 ஆகும்

(iii) தாபன விதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவு

2017 ஆம் ஆண்டின் போது 111 தேசிய பாடசாலைகளின் 536 கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினாகள் 11,938 நாட்கள் சம்பளமற்ற விடுமுறையைப் பெற்றுக்கொண்டிருந்த போதிலும் சம்பளத்திலிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கல்வி அமைச்சு சுற்றறிக்கை**

---------------------------------------------

(i) 2007 திசெம்பர் 13 ஆந் திகதிய 2007/20 ஆம் இலக்க சுற்றறிக்கை

உரிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் 10/2377/436/052 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் எந்தவொரு அரசாங்க பாடசாலையிலும் 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக்காலம் சேவையாற்றியுள்ள ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட வேண்டிய போதிலும், தெரிவுப் பரிசோதனையின் போது இதற்கு இணங்க இடமாற்றம் வழங்கப்படாத ஆசிரியர்கள் காணப்பட்டார்கள்.

| | | |
|---|---|---|
| | | (i) சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 127 தேசிய பாடசாலைகளில் 4,123 பேர் 08 ஆண்டுகளுக்கும் 32 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் இடமாற்றம் பெற்றுக் கொள்ளாது ஒரே பாடசாலையில் சேவையில் ஈடுபட்டிருந்தார்கள்.<br><br>(ii) 118 தேசிய பாடசாலைகளில் 786 ஆசிரியர்கள் தாங்கள் நியமிக்கப்பட்ட பாடங்களுக்கு புறம்பான பாடங்களைக் கற்பிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். விசேடமாக 40 தேசிய பாடசாலைகளில் ஆரம்ப ஆசிரியர் பயிற்சியைப் பெற்றுக்கொள்ளாத 163 ஆசிரியர்கள் ஆரம்ப தரங்களில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |
| (ii) | 2008 செப்தெம்பர் 19 ஆந் திகதிய 2008/37 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு 89 தேசிய பாடசாலைகளில் சமாந்தர தரங்களில் இருக்கவேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையை மிகைத்து 5,504 மாணவர்களைகச் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (iii) | 2013 நவம்பர் 07 ஆந் திகதிய 38/2003 ஆம் இலக்க சுற்றறிக்கை | (i) சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இனங்காணப்பட்டுள்ள 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான 123 தேசிய பாடசாலைகளில் காணப்பட்ட 1,775 ஆசிரியர் பற்றாக்குறைகளையும் 93 தேசிய பாடசாலைகளில் காணப்பட்ட 874 ஆசிரியர் மிகைகளையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii) சுற்றறிக்கையில் காட்டப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் ஒரு தேசிய பாடசாலையின் பிரதி அதிபர்களுக்கு ஒரு வாரத்திற்கு 10 பாடவேளைகளேனும் கற்பித்தல் நடவடிக்கை ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் 71 தேசிய பாடசாலைகளில் 146 பிரதி அதிபர்களுக்கு ஒரு பாட வேளையேனும் கற்பித்தல் நடவடிக்கைக்கு ஒப்படைக்கப்படாதிருந்ததுடன் 03 தேசிய பாடசாலைகளின் 05 பிரதி அதிபர்களுக்கு வழங்கப்பட்ட பாடவேளைகளின் எண்ணிக்கை 02 இற்கும் 06 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.<br><br>(iii) சுற்றறிக்கையில் காட்டப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் உதவி அதிபர்களுக்கு ஒரு வாரத்திற்கு 12 பாட வேளைகள் கற்பித்தல் நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் 29 தேசிய பாடசாலைகளின் 58 |

உதவி அதிபர்களுக்கு ஒரு பாட வேளையேனும் கற்பித்தல் நடவடிக்கை ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) சுற்றறிக்கையில் காட்டப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் பாடங்களை கற்பிப்பதில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் முறையே ஒரு வாரத்திற்கு ஆகக் குறைந்தது 40 நிமிடங்கள் கொண்ட35 பாடவேளைகள் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்பட வேண்டியிருந்தும் 94 தேசிய பாடசாலைகளில் 811 ஆசிரியர்களுக்கு ஒரு கற்பித்தல் பாடவேளையேனும் வழங்கப்படாதிருந்ததுடன் 95 தேசிய பாடசாலைகளின் 699 ஆசிரியர்களுக்கு 16 கற்பித்தல் பாடவேளைகளை விடக் குறைந்த எண்ணிக்கையானவையே வழங்கப்பட்டிருந்தது.

## 2.14 உள்ளகக் கணக்காய்வு

அமைச்சில் தோற்றுவிக்கப்ட்டுள்ள உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் 2017 ஆம் ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தையும் அதன் செயன்முன்னேற்றத்தையும் பரீட்சித்த போது விசேட முக்கியத்துவம் வாய்ந்த பின்வரும் துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) பாடசாலை சீருடைகள் பாடப் புத்தகங்கள் மற்றும் ஏனைய நலன்புரிச் செலவுகள்.

(ஆ) 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் கொடுப்பனவுகள்

(இ) தேசிய கல்விக் கல்லூரி ஆசிரியர் கலாசாலை ஆசிரியர் நிலையங்கள் என்பவற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகள்

(ஈ) பாடசாலைகளின் சுகாதாரம், குடிநீர், மின்சாரம், கட்டிட பராமரிப்பு மற்றும் நிர்மாணங்கள்

(உ) மாகாண மற்றும் வலய ICT நிலையங்களை நிர்மாணித்தல்.

(ஊ) மனைப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை வழங்குதல்

(எ) அண்மைக்கால செயற்திட்டங்களுக்கு உள்ளடக்கப்பட்ட 1,360 பாடசாலைகளின் வசதிகளை மேம்படுத்துதல்

(ஏ) அமைச்சின் கட்டிடங்களை நிர்மாணித்தல்

## 2.15 மனித வளங்கள் முகாமைத்துவம்

### 2.15.1 இணைத்துக்கொள்ளப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர், ஆளணி ஊதியங்களுக்கான செலவுகள் என்பன

மேலே 2.1 ஆம் பந்தியில் குறிப்பிட்ட கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரித்த, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால்

ஆளணி வேதன செலவுத் தொகுதிக்காகா ரூபா 31,796 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு தனி நபருக்கான செலவு ரூபா 127,290 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | ஆங்கீகரித்த பதவியணியினர் | ஊள்ளபடியான பதவியணியினர் | வேற்றிடங்களின் எண்ணிக்கை | மு்மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஸ்ட மட்டம் | 4,855 | 2,974 | 1,887 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 16,568 | 13,866 | 2,702 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | 252,357 | 224,697 | 69,159 | 41,499 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 8,876 | 8,253 | 623 | - |
| (v) | ஏனையவை (அமையம்/தற்காலிகம் ஒப்பந்த அடிப்படை) | 01 | - | 01 | - |
| | **மொத்தம்** | **282,657** | **249,790** | **74,366** | **41,499** |

2.15.2 2009 சனவரி 20 ஆந் திகதி 1589/30 ஆம் இலக்க (அதிவிசேட) வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிக்கோவைகளின் XVIII ஆம் அத்தியாயத்தின் 193 ஆம் நிபந்தனைகளின் பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க உத்தியோகத்தரும் இடமாற்றத்திற்கு உட்பட்டுள்ளதுடன் அந்த நிபந்தனைக்கும் தாபனவிதிக்கோவையின் III ஆம் அத்தியாயத்தின் ஒழுங்கு விதிகளுக்கும் இணக்கமற்ற வகையில் செயற்பட்டு கல்வி அமைச்சில் சேவையில் ஈடுபட்டுள்ள கல்விசார் மற்றும் கல்வி சாரா பதவியணியினர்களுக்கு இடமாற்றம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு 05 ஆண்டுகளிலிருந்து 17 ஆண்டுகள் வரையான கால வீச்சில் அமைச்சில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 273 ஆக இருந்ததுடன் கல்வி நிருவாக சேவை சம்பந்தமான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.